655 655

சிதம் மலர் 3.

"ஸ்திரி சாகஸ வெற்றி" அல்லது

# லலிதாங்கி சரித்திரம்

சென்னை: ஸ்ரீ பாலவிநோத நாடக சபாவின் உபாத்தியாயர்



11 NOV 1932

நாடகாசிரியர்: S. S. சங்கரலிங்கக் கவிராயர் அவர்கள் இயற்றியது.

K. S. அனந்தநாராயண அய்யர் - லலிதாங்கி.

சென்னை:
[illegible] நாயகர் ஸன்ஸ் பதிப்பு.

1932. [விலை 0-6-0.

O-,2MSL7,S
N32
170276

உ

முருகன் துணை

K. S. செல்லப்பா அய்யர், K. S. அனந்தநாராயண அய்யர்,

S. V. சுப்பைய பாகவதர், P. S. வேலு நாயர்,

ஆலந்தூர் கம்பெனியார்,

ஸ்ரீ பால விநோத நாடக சபையார் முதலிய

சகல நாடகக் கம்பெனியார்களும் பாடி நடித்துவரும்

## "ஸ்திரி சாகஸ வெற்றி"

அல்லது

# லலிதாங்கி சரித்திரம்

உடுமலை: ஸ்ரீமான் சரபகவி மாணவரும்

சென்னை: ஸ்ரீ பால விநோத நாடக சபாவின் உபாத்தியாயருமான

பரத சாஸ்திர சங்கீத சாஹித்திய சந்தவண்ணச் சரபம்

நாடகாசிரியர்:

ச. சு. சங்கரலிங்கக் கவிராயர் அவர்களால்

இயற்றப்பெற்றது.

பிரசுரித்தவர்கள்:

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

திருமகள்விலாச அச்சியந்திரசாலை,

சென்னை.

1932

[காபிரைட்]

[விலை அணா 6.

# முன்மொழி

லலிதம் - அழகு, (அழகைத்) தாங்கி - வகித்த, (தனக்கு நிகரற்ற அழகை வகித்தவள்) லலிதாங்கி என்னும் பெயர் பெற்ற இக் கதாநாயகியின் கதையானது ஓர் கற்பனைக் கதையாம். ஆயினும், இல்லறமே நல்லறம் என்னுமோர் கருத்தை இக்கதை தெளிவறக் காட்டுகின்றது. துறவறப் பெருமையைத் துலக்கி இல்லறத்தி லீடுபட்டே துறவறம் பெறவேண்டும், என்னு முடிவை இக்கதை தெற்றெனத் தெரிவிக்கின்றது. இதெங்ஙனமாயினும், கட்டுரைக் கற்பனு சக்தியமைந்த இந்நாடகம் ஆராலியற்றப் பெற்றதென்பது சந்தேகம்.

வெகுவா யிக்கதையை முதன் முதலாகவும், வெகுகாலமாகவும், மிக்க விமரிசையாகவும், ஆலந்தூர் கம்பெனியார்களே நடத்தினரென்பதை நன்கறிவேன். அங்ஙனமாயின் அக்கம்பெனியின் உபாத்தியாயர் வித்வத் ஸ்ரீ சித்ரகவி சுப்பராய முதலியா ரவர்களே இக்கற்பனைக் கதையை எழுதி அறங்கேற்றுவித் திருக்கலா மென்பது என்மனத் துணிபு.

ஆலந்தூர் கம்பெனி அயன் ராஜபார்ட் Mr. T. முருகேச நாயகர் Mr. ராவண கோவிந்தசாமி நாயுடு; ஷை கம்பெனி அயன் ஸ்திரி பார்ட் மனமோகன Mr. M. அரங்கசாமி நாயுடு; ஷை அரங்கசாமி ஐயங்கார்; திருப்புகழ் குப்புசாமி முதலியார் முதலியவர்களால் மிக்க விமரிசையுடன் நடத்திவந்த இந்நாடகம் தற்காலத்திய பாகவத கோஷ்டி நடிகர்களால், பரிமளிக்காதது நாடக வுலகிற்கே அபகீர்த்தியாகத் தெரிகிறது. சிற்சில நடிகர்கள் இக்கதையை நடத்திவரினுங் கதாசாரத்தைக் குறைவுபடுத்தியே நடித்துக் காட்டுகின்றனர்.

இக்குறைபாடின்றியும்; தமிழ் நாடகாபி விருத்தியைக் கருதியும் எனது தலைமை ஸ்தானத்தில் நடந்துவந்த சென்னை "ஸ்ரீ பால விநோத நாடக சபா" பால்யர்களுக்கு இந்நாடகத்தை வழுவின்றி நடத்து மார்க்கத்தை எடுத்துரைத்து நடித்துக்காட்டி நற்பெயர் பெறச் செய்ததை நன்கறிந்த நாடகாபிமானிகள் இந்நாடகத்தை அச்சிட்டுத் தரவேண்டு மென்பதற் கிணங்கி, தற்காலம் இச் சரித்தையை வெளியிடலானேன். இந்நூலுக்கேற்ற பழைய பாடல்கள் பலவிருக்கினுந் தற்கால வர்னமெட்டுகளா லமைந்த பாடல்களையும் வசனக் கோர்வைகளையும் சேர்த்து நாடக வழுவிலாது சகல நடிகருக்கும் ஏற்றவாறு இப் புஸ்தகத்தை அச்சிட்டிருக்கிறேன்.

அன்றியும், இந்நூலின் சகல வுரிமைகளும், சென்னை: மெஸர்ஸ் **B. இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ்** அவர்களுக்கே வுரியதாதலின் மற்றவர்கள் இப்புத்தகத்தையேனும், இதிலுள்ள பாடல்களையேனும் அச்சிட்டு வெளியிடில் புஸ்தக ரிஜிஸ்டர் சட்டப்படி சகல நஷ்டத்திற் காளாவார்க ளென்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாடகாபி மானிகள் பலருந் தவறாது இந்நூலை அங்கீகரிக்கக் கோருகின்றேன். வேணும் சுபம்.

20-9-32
சென்னை.

அன்பன்:
**கவிராஜ் ச. சு. சங்கரலிங்கன்.**
நாடகாசிரியன்.

---

## நாடக நடிகர்கள்

| | |
|---|---|
| லலிதாங்கி | கதாநாயகி |
| மடத்தாச்சி | ஷை தோழிப்பெண் |
| அழகேசன் | அளகாபுரிக் கரசன் |
| காந்தீபன் | சிற்றூர்க் கரசன் |
| காங்கேயர் | ஓர் தவசிரேஷ்டர் |
| நட்டுவன் | காங்கேயரின் மாறுவேடம் |
| குறத்தி | மலைவாசி |
| திருடர்கள் | இழிதொழிலாளர் |
| ஆண்பூதம் | இராக்ஷஸாம்சம் கானகவாசி |
| பெண்பூதம் | ஷை மனைவி |

தோழிகள், மந்திரிகள், வேடர்கள், காவலன் முதலியோர்.

நாடகம் நிகழிடம்:

சித்திரக்ஷேத்திரபுரம், அளகாபுரி அதற்கடுத்த கானகத்திலுமாம்.

---

Copy Right and Rights of Translation in any other Languages, strictly reserved by the Publishers.

உ

முருகன் துணை

"ஸ்திரி சாகஸ வெற்றி"

அல்லது

# லலிதாங்கி சரித்திரம்

### விநாயகர் துதி—வெண்பா

பூமருவு சோலைப் புகழ்திருநல் லூரோங்குஞ்
சாமி முருகன் சகோதரா—நேமிமால்
மாமருகா யானைமுகா வாமிமகள் பாலாவென்
றேமகற்ற நீயே துணை.

### இதுவுமது—விருத்தம்

பார்புகழும் லலிதாங்கி நாடகத்தைச்
செந்தமிழாற் படிப்ப தற்கு
நேர்முகமாய் வந்தருளி நினைத்தவர மேகொடுத்து
நின்று காக்குங்
கார்மயமார் கஜமுகன்ற னுடல் கிழியக்
கோடெடுத்த கணநா தன்றன்
சீர்பரவுந்திரு வடியாந் திருச் சந்நி
தானமெனுந் திருத்தாள் மாதோ.

---

**சீன்—1.** **இடம்-தர்பார்.**

**நடிகர்:—தோழிகள் லலிதாங்கி.**

[தோழிகள் நிற்கின்றனர். லலிதாங்கி பிராப்தம்]

### லலிதாங்கி பாட்டு

(பங்கஜலாலேசரியா என்ற மெட்டு)

பல்லவி

வந்தருள்வாயே முருகா மால்மருகா (வந்)

அநுபல்லவி

சுந்தரவேலா சுந்தரிபாலா
அந்தமிகுந்தசீலா அநுகூலா (வந்)

சரணம்

ஏக நாதா யேழைமேல் வாதா
தாரணிபோற்றும் பாதா ஜகன்னாதா (வந்)

சங்கீதவாசா சகலவிலாசா
சங்கரலிங்கன் நேசா தணிகேசா (வந்)

[லலிதாங்கி சிம்மாசனத் தணுகியதும்]

## லலிதாங்கி தோழிகள் தர்க்கம்

(தேவதேவாதிதேவா என்ற மெட்டு)

தோ. மகாராணி கல்யாணி வந்தனம் தந்தோம்

லலி. மந்த்ரிகாள் சந்ததம் வாழ்குவீர்

தோ. மலர்மாதே ஸ்திரி எங்கள் தாயேஸ்ரீ
அம்மாராஜேஸ்ரீ (மகா)

லலி. அந்தமுடன் என்னருகில்
வீற்றிருப்பீர் தோழியரே

தோ. ஆவலாய் பதமேவியே மலர் தூவியே (மகா)

லலி. வ-ம்:—பாங்கிகாள்! நமது தர்பாரின் க்ஷேமலாபங்களுக்கும், தேச வாசிகளின் சுகத்துக்கும், இராஜ காரியங்களின் இஷ்ட காமியார்த்தத்திற்கும் இடையூரின்றிப் பாதுகாத்துவரும் சர்வேஸ்வரனைத் தியானிப்போம்.

[சகலரும் பாடுதல்]

## பாட்டு

(தேசராஜபூஜிதா என்ற மெட்டு)

மாதுபாகமானவா வானவா வந்தனம்
மாமறைபுகழ்சொலும் மாசிலாத தாயகா
வாகா சிற்பரா தற்பரா வாமனேகரா
வடிவினிலா சிறியநிலா மதிபுனைவாய் நதிவனைவாய்
மாரநீறுடியோய் மாலயன்றேடியோய்
மங்களா சங்கரா (மாது)

கானமேவும்ரஞ்சிதா கந்தவேளின்பிதா
காலனைவிழமோதுங் கருணாகராசிவா
காளமேற்றவா நீற்றவா கட்கடாக்ஷவா
கரியுரியாய் அரியறியாய்
நரிபரியாய் வரவிடுவாய்
கால்களுங்காணரா கங்கணம்பூணரா
காரணா ஆரணா (மாது)

[சகலரும் ஆசனத் தமர்கின்றனர்.]

லலி. வ-ம்:—தோழிகாள் நமது தேச விசேடங்களை விசாரிக்க வெண்ணினேன். உமது கருத்தென்ன.

தோழி. வ-ம்:—தாயே சித்தப்படி விடைகூறத் தயாரா யிருக்கின்றோம்.

## லலிதாங்கி பாட்டு

(மலர்பரித்திடவே என்ற மெட்டு)

லலி. மாதமூன்று மாரிபெய்யுதா
மந்த்ரிகாள் விந்தையா யெந்தனுக்கே யுரைப்பீர்

தோழி. மானிலத்தில் மாதமும்மாரித்
தான்பொழியுதே கிர்பாகரி (மாத)

லலி. வ-ம்:—சேடிகாள் நமது ராஜ்ஜியத்தில் மாதமும்மாரி பொழிந்து குடிகளிட்ட பயிர் விளைந்து க்ஷேமமா யிருக்கின்றதா.

தோழி. வ-ம்:—தாயே! வருணதேவனுடைய கிருபையால் காலமழை தவறாமல் வருஷித்து வயல்கள் செழிப்புற்று குடிகள் சுகஜீவியாய் வாழ்கின்றாரம்மா.

## லலிதாங்கி பாட்டு

(தேசராஜ விலாசபூஜித என்ற மெட்டு)

ஆலயந்தனிலேதினந்தவ ராமலேஅதிபூசைகள்
சாலவேதிரிகாலமேசெய்கின் றார்களாபதில்சொல்லுவீர்

தோழி பாட்டு (ஷை மெட்டு)

மாலரன்வளராலயந்தனில் காலமுந்தவறாமலே
சீலமாயபிஷேகபூசைகள் செய்கின்றார்மகாராணியே

லலி. வ-ம்:—பாங்கிகாள்! தேவாலயங்களில் திரிகாலபூசைகள் நடந்து வருவதுந் தவிர மாதோற்சவம் வருடோற்சவம் முதலிய வைபவங்கள் நடைபெறுகின்றதா.

தோழி. வ-ம்:—ஆலயங்கள்தோறும் காலபூசைகள் தவராமலும் திருவிழா வைபவங்கள் குறையாமலும் முறையாய் நடந்து வருகின்றதம்மா!

## லலிதாங்கி பாட்டு

(மந்திரி பவளச்சேனு என்ற மெட்டு)

வேதியர்கள்வேதாகமம் வோதுகின்றாரா
யாதுமேகுறைவின்றிகுடிகள் நீதியாய்வாழ்கின்றாரா (வே)

தோழி பாட்டு (ஷ மெட்டு)

சந்ததமும் அந்தணர்கள் யாகம் செய்கின்றூர்
இந்தமாநகர் வந்தமாஜனம் விந்தையாய் வாழ்கின்றூரே

லலி. வ-ம்:—சகிகாள்! காலமுறைதவருமல் பிராமணர்கள் யாக எக்கியங்க ளியற்றியும் வேதங்களோதியும் வருகின்றூரா. அன்றியும் நம் நாட்டில் குறியேறிய அயல்தேசவாசிகள் க்ஷேமமாயிருக்கின்றூர்களா.

தோழி. வ-ம்:—அரசியே! வேதியர்கள் இதிகாச வேதங்களை வோதி வருகின்றனர். அயல்தேசவாசிகள் சுகமாக வாழ்ந்துவருகின்றனர்.

## லலிதாங்கி பாட்டு

(மானைப்பிடியே வனக்கிளியே என்ற மெட்டு)

சத்திரந்தன்னி லன்னதானப்லன்
சரியாய்நடக்குதா மந்த்ரிகாள்
இத்ததிஎனக் கெடுத்துரைசெய்குவீர்
யேதமிலாகுண தந்த்ரிகாள்

தோழி பாட்டு (ஷ மெட்டு)

அன்னதானஞ்சொர்ன தானங்குறையாம
லனுதினம் நடந்தேறுதே
எந்நகரத்திலுங் கன்னியேயுன்புகழ்
என்றுநிலவி யுலாவுதே

லலி. வ-ம்:—நமது தேசத்தின் நாற்பாங்கெல்லைக் குட்பட்ட சத்திரங்களில் அன்னதான தர்மங்கள் சரிவர நடக்கின்றதா?

தோழி. வ-ம்:—ஆங்காங்குள்ள தர்ம சத்திரங்களை நாடிவரும் அதிதி பரதேசிகட்கு சகல தானமும் சரியாய்க் கொடுத்துவருகின்றூர்கள்.

## லலிதாங்கி பாட்டு

(அருக்குமங்கையர் என்ற மெட்டு)

எனக்குபணிவுட னரசியல்புரிபவ
ரனுப்புமணிகல பகுதிகள்சரிவர
கொடுத்துவருவதை வுரைசெயும்விரைவினில் சகிமாரே

தோழி பாட்டு (ஷ மெட்டு)

சிறுத்தவரசர்கள் தருமொருபணமதை
பகுத்துநிதிபதி தனதிடமணுகிட
விடுத்துவருவது குறைவிலைபதிபுகழ் மகராணி

லலி. வ-ம்:—கப்பங்கட்டக்கூடிய அரசர்கள் வில்லங்கமின்றி செலுத்தவேண்டிய தொகையைக் குறையாமல் அனுப்புகின்றார்களா?

தோழி. வ-ம்:—சிற்றாரரசர் பலரும் தாம்தாம் செலுத்தவேண்டிய கப்பங்களைக் கொடுத்துவருகின்றார்கள்; பொக்கிஷாதிபதியிடங் கணக்கு முதலியவைகள் சரியாயிருக்கின்றன.

லலி. வ-ம்:—சந்தோஷம்; இனி தர்பார் கலையலாம். தோழிகாள்! நான் அந்தப்புரத்திலிருக்கின்றேன்; வந்துசேருங்கள்.

[செல்கின்றனர்] (சீன் முடிவு)

**சீன்—2. இடம்-ஏகாந்தமாளிகை.**

**நடிகர்:—தோழிகள் லலிதாங்கி.**

லலி. வ-ம்:—சேடிகாள்! இச்சித்ர க்ஷேத்திரபுரத்தை என் பிதாவானவர் நீதி தவறாது நெடுங்காலம் அரசு செலுத்தி, ஆண் மகவின்மையால் எனக்கு முடிசூட்டிப் பரகதியுற்றனர். யாதொரு விக்கினமின்றி நானு மின்னகரை இந்நாள்வரை செங்கோலோச்சி வருகின்றேன். எனினும், சின்னாளாய் என் மனம் வேறெண்ணங்கொண்டு மெலிகின்றது. இதற்கென் செய்வேன்?

தோழி. வ-ம்:—அம்மணி! அவ்விதமான காரணமென்ன? தெரியப் புகன்றால் நலமாகும்.

## லலிதாங்கி விருத்தம்

பாலினுமினியசொல்லார் பாங்கியேசொல்லக்கேளாய்
மாலினுமினியராஜ மன்மதனெனுமோர்பாவி
வேலினுங்கொடியவம்பை வீசுமோர்பருவமாமிவ்
வாலிபகாலம்வீணாய் வளருதென்செய்குவேனே.

லலி. வ-ம்:—பாங்கிகாள்! வாலிபகாலம் வீணாவதில் என்ன சிலாக்கியம்? பருவகாலத்தில் அருவ மன்மதனைப் பூசித்து, அவனது லீலாவினோதத்தை நேசித்திருப்பதல்லவா பாக்கியம். மாநிலத்தி லவதரித்த நம்போன்ற மங்கையர்களுக்கேற்றது மணமகன் இன்பமல்லவா? இதனை ஏற்றகாலத்தில் தூற்றிவிட்டு சும்மா யிருப்பதில் பலன் யாது? சேடிகாள்! எத்தேசமும் போற்ற உத்தம நீதிமுறைப்படி சிங்காதனத்தமர்ந்து, செங்கோல் செலுத்தி பிரயோசனமென்ன? மற்ற யானை, சேனை, பொன், பொருள், பூமி யிருந்தென்ன? கைநிறைந்த பணத்தைவிட கண்ணிறைந்த கணவனே சிலாக்கிய மென்பது உலக

மொழி யல்லவா? சேடி! இதனை எண்ணியே என்மனம் வாடுகின்றது. அன்றியும், என்போன்ற நாரிமணிகள் தத்தம் மனதிற் கிசைந்த மன்னவருடன் கூடி சந்தோஷமுற்றிருக்க, நான் மாத்திரம் இரவும் பகலும் இவ்வித யேக்கமுற்றிருக்கலாமா? மேலும் சிருஷ்டி கர்த்தாவா லெனக் களிக்கப்பட்ட சிங்கார ரூப வினோத தேஜோன்மய தேகயோக வாலிப,—

## பாட்டு

### (மதிகெட்ட மன்னனை என்றமெட்டு)

கண்ணிகள்

வாலவயது வந்துங் காலம் வீணாகுதே
மங்கையே இள நங்கையே இந்த
வாலிப காலத்தைப் பாழாக்க லாகுமோ
பாங்கியே சுந்த ராங்கியே (வால)

பாவிமன் மதபாணம் ஆவிதுடி துடிக்க
வாட்டுதே ஆவல் மூட்டுதே வர்ன
பாரக்குஜ மிரண்டும் பூரித்தெழுந்து விம்மி
சீறுதே என்னை மீறுதே (வால)

தென்றலான புலி வந்துநின்று இடந்
தேடுதே மிக ஜாடுதே எந்தன்
செங்கை தங்கிநின்ற சங்கினங்கள் கழன்
றோடுதே மனம் நாடுதே (வால)

சேயைப்போன்ற மதி தீயைப்போல வந்து
காயுதே உடல் தீயுதே செழுந்
தேனும்பாலும் சீனிப் பாகுமே கசந்
திருக்குதே துன்பம் பெருக்குதே (வால)

லலி. வ-ம்:—சேடிகாள்! என்ன காலவிதி. ஆஹா! என்போன்ற பெண்கள் இவ்வுலகிலிருப்பார்களா? எனது எவ்வன காலத்திற் கேற்ற செவ்வையான குஜமிரண்டும் படர்ந்த மார்பில் வளர்ந்து நிமிர்ந்து மேருவைப்போன்ற பாரத்தைக் கொடுக்கின்றதே? மன்மத னெய்யும் பாணக்கினியால் மனமானது கொதிக்கின்றதே! சந்திர வெப்பஞ் சகிக்கக்கூடவில்லையே! மந்தமாருதப் புலியால் என் தேகம் துடிக்கின்றதே! மதுரமான பாலும் தேனும் பானம் செய்யக் கசக்கின்றதே! தேகவெப்பந் தாளாது முத்து மாலைகள் கருகி விழுகின்றதே! கையிலணிந்த ரத்தின வளையங்கள் கழன்றோடுகின்றதே! தோழிகாள்! இவ்வித துன்பத்தை எவ்விதம் சகிப்பேன். இதற்கென்ன செய்வேன்? ஒன்றுந் தோன்றவில்லையே!

## தோழிகள் பாட்டு

(நாமேழுகம்மது என்ற மெட்டு)

பல்லவி

அம்மா யிதென்ன இம்மா திரியாய்ச்
சும்மாவருந்துகிறாய் அடியம்மா
சும்மாவருந்துகிறாய் (அம்)

அநுபல்லவி

பிரம்மாவிதித்த விதிப்படி ஜென்மித்த
பெண்ணுக்கோராணில்லையா இருக்கும்
எண்ணிக்கொள்ளத்தொல்லையா (அம்)

சரணம்

தக்கபருவம் அடுத்தபடியினால்
மிக்கமுயற்சிவேணும் இருந்தால்
கைக்குப்பலன்காணும் (அம்)

சங்கஞ்செய்சங்கர லிங்கஞ்சொன்னபடி
சந்தற்பம்வந்திடுமே இன்பமும்
சிந்தைக்குகந்திடுமே (அம்)

வ-ம்:—அம்மா! எவ்வனகாலத்தில் இவ்வித துன்பம் வருவது யார்க்கும் சகஜந்தான்; ஆனால் தாங்கள் யாதொன்றுக்கும் அஞ்சாதிருங்கள். தக்கவரனைத்தேடி மாலையிடுகின்றோம்.

லலி:—பாங்கிகாள்! அந்தப்பாவி மன்மதனென்ன கல்மனதுடையவனா? ஜீவகாருண்ய மில்லாதவனா? பெண்ணென்றால் பேயுமிறங்குமே இவனுக்கிவ்வித இரும்பான மனமிருப்பதொரு பெருமை தானா? ஆ ஹா! இதோ பார்த்தனையா! தாமரை, மா, முல்லை, அசோகு, நீலோர்ப்பலம் என்னும் பஞ்சபுஷ்பக் கணைகளை எடுத்து வில்லில் தொடுத்து என்மேல் விடுத்து அடிக்கின்றானே! அடே பாவி மன்மதா? அரன் விழியால் கெருவமடங்கி அரூபியான உனக்கு என்போன்ற பெண்களை எதிர்ப்பதொரு வீரமா மன்மதா!

## பாட்டு

(வருத்துவதழகோ என்ற மெட்டு)

இதுவுனக்கழகோ சொல்லாயடாமன்மதா
இதுவுனக்கழகோ சொல்லாய் (இது)

வதுவையிலாத வாலிபமாதை
வாளியாலே வருத்திடவுனக்கே (இது)

பேதமைப்பெண்கள் பாதகந்தருமோ
பேயைப்போல்காமத் தீக்கணைவிடுக்க (இது)

பெண்களைஎதிர்க்க பெருமையோவுனக்கு
பேடிபோலென்னைத் தேடியேவருத்த (இது)

திங்கள்செங்குடையாய் தேன்மலர்ப்படையாய்
சங்கரலிங்கசங் கீதப்பேருடையாய் (இது)

வ-ம்:—மன்மதா உனது மகிமை என்ன. கெம்பீர வீரதீர பராக்ரம மென்ன. இருந்தும் அறிவற்றவனுயினையே. ஆவிக்கிசைந்த அருங்கணவனில்லா மாதென்னை வாட்டுவது தகுமா. இந்த கெருவத்தாலல்லவோ அரன்விழியால் அனலாகினுய். சீ சீ மதியற்றவனே விலகிவிடு. கண்ணிருந்துங் கிணற்றில் விழுவார் கதைபோலன்ருே நின் நியாயமுளது. வேண்டாம். உன் போன்ற வில்வீரரிடம் உனது வீரதீரசூர பராக்ரமத்தைக் காட்டி பெயரை நிலைநாட்டி நற்புகழ்பெறு. நானே இளங் கன்னிப்பெண் என் பாவத்தை யேற்காதே சென்றுவிடு.

சகி. வ-ம்:—அம்மா வீணுக மனம் வாடுவதில் தேகாரோக்யங்கெடும். மனந்தடுமாருது மணமுடித்து மங்களானந்தம் பெற யோசிப்பது நலம்.

## லலிதாங்கி பாட்டு

### (பூமிமேச்சிடும் அண்ணுமலை என்ற மெட்டு)

யோசனையேதுண்டு நேசிகளா எனக்
கோதுவீர் சுகமீகுவீர் நலமாகுவீர்-எனக்
குற்றஆசையது முற்றிடாதுமனந்
தேறுமா துன்பந் தீருமா

தோழி பாட்டு (ஷை மெட்டு)

துன்பந்தீர்க்குமொரு இன்பமானசேதி
சொல்லுவோம் இன்றே செல்லுவோம்
சுபங் கொள்ளுவோம்-இளந்
தோகையேமனவுற் சாகமாகயிருப்
பாயம்மா பொறுப் பாயம்மா

லலி. வ-ம்:—பாங்கிகாள்! என் மனத்துயர்தீர என்னயோசனை சொல்லப்போகின்றீர்கள்? "மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்தல்" என்பதல்லவா?

தோழி. வ-ம்:—அம்மா! தகுந்த யோசனை என்ன இருக்கின்றது; இசைந்த மன்னனைப் பார்த்து மாலையிட்டுக்கொள்வதே நலம்!

லலிதாங்கி பாட்டு (ஷ மெட்டு)

ஆசைக்கேற்றப்ராண ராஜனெங்குகண்டு
தேடுவேன் மாலே சூடுவேன் விளையாடுவேன்-பெற்ற
அன்னை தந்தையில்லா கன்னிஎன்பதறி
யீர்களா சகி மார்களா

தோழி பாட்டு (ஷ மெட்டு)

உந்தனுசைக்கேற்ற விந்தையானராஜ
ராஜனே அழகேசனே பிரகாசனே-வெகு
உல்லாசமாயந்த சல்லாபனேமணம்
செய்யலாம் இன்ப மெய்யலாம்

தோழி. வ-ம்:—அம்மா தங்கள் பருவவயதிற் கேற்ற புருடன் ஒருவரிருக்கின்றூர். ஆதியில் தங்கள் தாய் தந்தையரும் அவருக்கே தம்மை மணமுடிக்கக் கருதியிருந்தார்கள். அது செய்தி எங்களுக்குத் தெரியும். தங்களிடம் தெரிவித்தால் தாங்கள் என்ன நினைப்பீர்களோ வென்று இதுவரை சொல்லாதிருந்தோம். உத்திரவு செய்தால் தெரிவிக்கின்றோம்.

லலி. வ-ம்:—சகி! இதையேன் முன்னமே தெரிவிக்கக் கூடாது. இருக்கட்டும். அவர் யார் எங்கிருப்பவர் என்பதை விவரமாகத் தெரிவிப்பாய்.

தோழி. வ-ம்:—அம்மா அளகாபுரியை பரிபாலிக்கும் அழகேச மகாராஜ னென்றொருவரிருக்கின்றூர். மன்மதனும் மயங்கும் பேரழகுடையவர். தங்களுக்குத்தக்க மன்னவர்தான் இன்னும் மணம் செய்துகொள்ளாமல் சதா ஈஸ்வரத் தியானம் செய்து கொண்டு பெண்வாடையே கூடாதென்றிருக்கின்றூராம். இருந்தாலும் தங்கள் பாக்கியவசத்தால் எப்படியும் தம்மைக் கைப்பிடிப்பாரென்று நினைக்கின்றேன். தாங்கள் எதற்கும் அஞ்சாமல் தங்கள் மனக்கருத்தை ஓர் லிகிதத்தில் எழுதி என்னிடங் கொடுத்தால் நான் ஓர் சந்யாசிப் பெண்போல் வேடமிட்டுக்கொண்டு அவரிடம் சென்று கடிதத்தைக் கொடுத்து சம்மதிக்கச் செய்து வருகிறேன்.

லலி. வ-ம்:—மெத்த சந்தோஷம்; ஏதோ ஒரு கடித மெழுதுகோல் கொண்டுவா?

[தோழி கடிதம் எழுதுகோல் கொண்டு வர, லலிதாங்கி திருமுக மெழுதி வாசித்தல்]

## லலிதாங்கி விருத்தம்

சீர்பெற்ற அளகாபு ரிக்கிறைவ ரேயுமது
திருமலர்ப் பாத மேற்றி
சித்ரக்ஷேத் திரபுரத் தரசியாம் லலிதாங்கி
திருமுகச் செய்தி யறிக
பேர்பெற்ற வெனது தாய் தந்தையரு மக்கென்னைப்
பெருமைசேர் மண மியற்றப்
பேசியிவ் வுலகைப்பி ரிந்ததோர் செய்தியிப்
பேதைநா னின்ற றிந்து
தார்பெற்ற திருமணம் புரியவென் சகிதனைத்
தன்னக ரனுப்பி வைத்தேன்
சங்கதியெ லாமறிந் திங்குவந் தென்னையிச்
சகமறிய வதுவை செய்து
தேர்பெற்ற வென்னகரை முடிசூடி வாடாத
செங்கோல் செலுத்தி நாளுஞ்
சித்தாஞ் சிதமான சுத்தமன் மதலீலை
செய்தென்றும் வாழ்கு வீரே.

லலி. வ-ம்:—சகி! இதோ இந் நிருபத்தைக் கொண்டுபோய் கொடுத்து, எப்படியாவது அவர் என்னை மணமுடிக்குமார்க்கம் செய்து வருவதுன் கடமை சீக்கிரம் செல். [செல்கின்றனர்.]

(சீன் முடிவு.)

**சீன்—3.** **இடம்-அழகேசன் தர்பார்**

**நடிகர்:—அழகேசன், மந்திரிகள், விதூஷகன், மடத்தாச்சி.**

[படுதாமேற்சொல்ல மந்திரி பிரதானிகள் நிற்நிற்கின்றனர் அழகேசன் பிராப்தம்.]

## அழகேசன் பாட்டு

ஸ்ரீராகம், தாளம்-ரூபகம்.

பல்லவி

மனமோகன விஜய சிங்காரன் இந்த
மானில நாடக வினோதன் (மன)

அநுபல்லவி

ஜனமேது திசுகுணதீரன் கனமேவியசுபவுதாரன்
தானன் கவிவாணன் புவிமானன் ஜனத்தியானன்
திரு ஜகா பகா மஹா திபா
தயா சீல தவமேவிய (மன)

சரணம்

தாராடும் தேரோடும் பேரோங்கும் நாடெங்கும்
சரபமுத்துசாமிஎனும் மாகதத்தின்ருள்பணியும்
சங்கர லிங்கன லங்கிர்த
சங்சுகந்த சுதந்தர (மன)

[அழகேசன் சிம்மாசனத் தணுகிய தும்மந்திரிக ளெழுந்து]

## தர்க்கம்

(ஷாகேவாலா என்ற மெட்டு)

மந்திரி. வந்தனந் தந்தோம் மகராஜே

அழ. கல்யாண் கல்யாண் மந்திரிகளே

மந்திரி. சந்ததந் திருவடி மறவோமே

அழ. ஜகமீதே சுகமாக துணேவோரே வாழ்வீரே

விதூஷகன். தரணிபர்தொழுதிடு மதிசூரா
தருமநெறிதவரா குணதீரா
திருமலரடி பணிந்தேன் காராய்

அழ. சேவகனே பூவுலகி லேதினமும் வாழ்குவையே

மந். வ-ம்:—மகராஜ்! மந்திரிகள் நமஸ்கரிக்கின்ேறும்.

அழ. வ-ம்:—கல்யாண்.

விது. வ-ம்:—மகராஜ்! காவலன் நமஸ்கரிக்கின்றேன்.

அழ. வ-ம்:—ஆசிர்வாதம். ஜேசங்கர்.

மந். வ-ம்:—ஜேசங்கர்.

விது. வ-ம்:—ஜேய்ய்ய் சங்கர் பம்பம்பம்பம் லொடக் மாதேவா.

[அழகேசன் சிம்மாதனத்தேறி நின்று]

## அழகேசன் விருத்தம்

திங்களுங்கங்கைசூடி ஜெகமெலாம்விளங்குந்தேவே
மங்கையோர்பாகங்கொண்டு மான்மழுதரித்தகோவே
பங்கமிலாமலிந்தப் பதிஜனம்நிதியாய்வாழ்ந்து
எங்கையிற்செங்கோலோங்க ஈசனேயருள்செய்வாயே.

## அழகேசன் பாட்டு

(செந்தமிழுலகினில் என்ற மெட்டு)

ஈசாதேவர்கள் பாவ நாசா தில்லைவாழ்நட
ராஜாதாசர்கள் நேசனே நலமருட்கிரு
பேசாவேதவு பாசனே

என துவிஜீனயகல மன துமிகமகிழ
நின துகமலமலர்ப் பதமருள்செயும்பர
மேசாபக்தர்கள் வாசனே படர்ந்தஜெக
தீசாவுமாம கேசனே (ஈ)

நாதா நளினமலர்ப் பாதா சகலசலக்
யாதா வந்தருள் புரிவாய் விளங்கும்பிர
போதா நல்வரந் தருவாய்
நடனமிடுமரிய கனகசபையிலகு
மினிய கவுரியுமை மகிழுமழகுடைய
நாதாந்த ஞான சேகரா சங்காலிங்கன்
கீதாந்த மோதும் பூதரா

அழ. வ-ம்:—பிரதான்! சர்வ ஜீவதயாபர வஸ்துவின் திருவருட் கிருபையால் அரிதாகிய இம்மானிடப் பிறப்பில் விக்கினமின்றி அவதரித்து; பிதா மாதாவின் பெயர் விளங்க இச்சிம்மாசனத் தமர்ந்து செங்கோலோச்சி வருகின்றேன். வருடமுறை தவரா தின்று தர்பார் கூடி யிருக்கின்றேம். ஆதலின், நமது ராஜ்ஜியக் குடிகளின் க்ஷேமலாபங்களையும், தேச காரியங்களையும், விசாரிக்க வெண்ணினேன். உமதிஷ்டமெப்படி.

மங். வ-ம்:—உமது இஷ்டம்போற் செய்யலாம். அடியேன் காத்துக் கொண்டிருக்கின்றேன்.

## அழகேசன் பாட்டு

(இந்தக்குட்டையை என்ற மெட்டு)

தேசத்தில் மும் மாரிபெய்து
செந்நெல்விளைந் தோங்குதா
செப்புவீரெமக் கெடுத்து
சீரதாய் மந்த்ரிகளே

மந்திரி பாட்டு (ஷை மெட்டு)

மாதமூன்று மாரிபெய்து
வயலெலாம் விளைந்துமே
யாதுங்குறைவின்றி குடிகள்
வாழ்கின்றார் மன்னவனே

அழ. வ-ம்:—மந்திரிகாள்! நமது தேசத்தில் மாதமும் மாரிபெய்து குடி ஜனங்களிட்ட பயிர்கள் தழைந்தோங்கிவளர்ந்து க்ஷேமமா யிருக்கின்றார்களா?

மந். வ-ம்:—அரசே! வருணனது கிருபையால் மாதமழை குறைவின்றி வருஷிக்கின்றது. நெற்பயிர்கள் வளர்ந்தோங்கி குடிகள் குறைவின்றி வாழ்கின்றனர்.

## அழகேசன் பாட்டு

(சீர்கொண்டிலகுமேந்தன் என்ற மெட்டு)

ஆலயபூசைகள் காலமுறைப்படி
அன்பாய் நடக்கிறதா
அதிவிரைவாய் பதில்சொலுவீர்
மதிபிசகா மந்திரிகளே

வ-ம்:—தேவாலயங்களில் திரிகாலபூசைகள் தினந்தோறுந் தவராமல் செம்மையாய் நடந்தேறுகின்றதா?

மந்திரி பாட்டு (ஷை மெட்டு)

தேவாலயபூசை தினந்தினங்குறைவின்றி
தென்பாய் நடைபெறுதே
ஜெயமிகுமா தவகுணனே
பதிபுகழ்ரா ஜேந்திரனே

வ-ம்:—ஆலயங்களில் காலமுறைதவராமல் பூசைகள் நடக்கின்றது. சந்யாசிகளும், யாத்ரீகர்களும், ஏனையஜனங்களும் பூஜாகாலங்களிலணுகி சுவாமிதெரிசனம் செய்துவருகின்றனர்.

## அழகேசன் பாட்டு

(பூனகண்டமு என்ற மெட்டு)

வேதமோதிடும் வேதியர்தினம்
யாகமேசெய் கின்றூர்களா
ஓதுவீர் பதில் மந்ரிகாள் வெகு
சாதுவாகிய தந்திரிகாள்

அழ. வ-ம்:—வேதியர்கள் தத்தம் முறைதவராது வேதாகமங்களை வோதிவருகின்றூர்களா?.

மந்திரி பாட்டு (ஷை மெட்டு)

தேசராஜவி லாச பூஜித
தீரனே சுகு மாரனே
மாசிலாமறை யோர்க ளாகம
பூசையே செய் கின்றூர்களே

மந். வ-ம்:—அரசே! அந்தணர்கள் தந்தம் முறைப்படி ஆலயங்கட்குச் சென்று; யாக யெக்ஞாதியங்க ளியற்றி வேதாகமங்களை

வோதி வருகின்றனர். யாதுங் குறைவில்லை. அது விஷயத்தில் தாங்கள் சந்தேகிக்க வேண்டாம்.

### அழகேசன் பாட்டு

### (மரத்திலடித்தக்கடித என்ற மெட்டு)

பகுதி யளிக்கு மரசர் பணத்தைப்
பகுத்துக் கொடுத்து வருவதைத்
தகுதியுடனே யுரைப்பீ ரெனது
சமர்த்தி லுயரு மந்த்ரிகாள்

அழ. வ-ம்:—மந்த்ரியா! நமக்கடங்கி நடக்கும் சிற்றரசர்கள் கட்டும் கப்பங்கள் சரிவர வருகின்றதா? பொக்கிஷக் கணக்குகளைப் பரிசோதித்து வருகின்றீர்களா.

மந்திரி பாட்டு (ஷை மெட்டு)

அரசர் கொடுக்கும் பகுதி தவரா
தரசே வருகு தறிகுவீர்
அதிபதி நிதிபதி தன திடம்
அனைய விவரந் தெரிகுவீர்

மந். வ-ம்:—பிரபு! சிற்றரசர்களின் கப்பங்கள் தடையின்றி வந்து சேர்கின்றது. பொக்கிஷக் கணக்குகளும் சரியா யிருக்கின்றது.

அழ. வ-ம்:—ஜே சங்கர் மகாதேவ்.

மந். வ-ம்:—ஜே சங்கர் மகாதேவ்.

விதூ. வ-ம்:—ஜேய்ய்ய் சங்கர் பம்பம்பம் லொடக்மாதேவா.

அழ. வ-ம்:—பிரதான்! இனி தர்பார் கலையலாம். நான் பூஜாமடம் செல்கின்றேன். (சீன் முடிவு)

**சீன்-4.** **இடம்-பூஜாமடம்.**

**நடர்:—மந்திரிகள், விதூஷகன், அழகேசன், மடத்தாச்சி.**

அழ. வ-ம்:—ஜேசங்கர்; மகாவேவ்;

### தேவாரம்

அரியானை அந்தணர்தஞ்சிந்தையானை
அருமறையைநகைத்தானைய னுவையார்க்குந்
தெரியாதத்தத்துவனைத்தேனைப்பாலைத்
திகழொளியைத்தேவர்கள் தங்கோனைமற்றைக்
கரியானைநான்முகனைக்கனலைக்காற்றைக்
கனகடலைக்குலவரையைக்கலந்துநின்றப்
பெரியானைப்பெரும்பெற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே,

(ஷை பாட்டு)

தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்
சார்பினுந்தொண்டர்தருகிலாப்
பொய்ம்மையாளரைப்பாடாதேஎந்தைப்
புகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ்சோறுங்கூரையும்
யேற்றலாமிடர்கெடலுமாடம்
அம்மையேசிவலோகமாள்வதற்
கியாதுமேயுறவில்லையே.

அழ. வ-ம்:—ஜே சங்கர் மகாதேவ்

மங். வ-ம்:—ஜே சங்கர் மஹாதேவ்

விதூ. வ-ம்:—ஜேய்ய்ய் சங்கர் பம்பம்பம் லொடக்மாதேவா

அழ. வ--ம்:-மந்த்ரிகாள்! ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாகவுன்னைத் தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே என்றபடி சதா சிவபிரானது திவ்யமங்கள வைபவங்களைப் பாடித்துதிப்பதை விட மேலான இன்பம் வேறென்ன விருக்கின்றது.

மங். வ-ம்:—அரசே! இருந்தாலும் இல்லறவின்பமே பெரிதென்று பெரியோர் இல்லறமல்லது நல்லறமன்றெனத் தெரிவித்திருப் பதைத் தாமறியீரா.

அழ. வ-ம்:—மந்ரியா. இதென்ன இப்படிக் கூறுகின்றீர்.

நீரிற்குமிழி இளமை நிறை செல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

என்பதை யறியாதவர்போல் பலவிதம் பேசுகின்றீர். துறவறச் சுகம் இல்லறத்துக்கில்லை என்பதை எண்ணுவீர்.

மங். வ-ம்:—தாங்கள் சொல்லியபடி துறவறமே மேலானதாக வைத் துக்கொள்வோம். இருக்கினும் இல்லற வாழ்க்கையி லீடுபட்டு பிறந்ததற் கேற்றபடி நடப்பதே மானிடர் கடமை என்பதை மறந்து பேசுவது நியாயமன்று. அரசே நாம் நமது தாய் தந்தையர்களுக்குப் புத்திரனுகப் பிறந்த தெதற்கு அவர்களின் குடும்பப் பெயரை விளக்குதற்கல்லவா. இதுபோல் தமக்குப் பின் இத்தருமச்செங்கோலைத் தாங்கி என்போலியரைக் காத்துத் தங்கள் பெயரைக்கூறி ஈமக்கடன் முடித்து குலப்பெயரை விளக்கக் குமாரன் வேண்டுமல்லவா. ஆகவே மகாராஜா அதற் கேற்ற மணமுடித்து மணமகளுடன் இல்லறம் நடத்துவதை விடுத்து,

## மந்திரி பாட்டு

(எப்படியிருந்தால் நமக்கென்ன என்ற மெட்டு)

இராகம்-ஆரபி, தாளம்-ஆதி.

பல்லவி

இப்படியிருப்ப தழகாகுமா மன்னா
இப்படியிருப்ப தழகாகுமா (இப்)
கைப்பிடி செங்கோற் பெருக
கல்யாணம் செய்துகொள்ளாமல் (இப்)

அநுபல்லவி

எப்படியிருந்த நல்ல இருடிமுனிவர்களும்
மைப்பிடி மாதரைக்கூடி மருவியிருக்கநீரும் (இப்)

சரணம்

உலகத்தில் சிறந்ததுவே புத்ரபாக்யம்
ஓதுமீதற்றூர்க்கேது சிலாக்யம்
பலவித சுகமிருந்தா லென்ன யோக்யம்
பாரிதை யரசுசெய்யும் பாலகனில்லாமல் நீரும் (இப்)

மந். வ-ம்:—அரசே! எவ்வித சம்பத்திருந்த போதிலும் இச்சிம்மாசனத் தமரும் தம்போன்ற ஆண் மகவில்லா பாக்யம் சிலாக்யமற்றதே. 'புத்திரனில்லா வீடு, புலிவளர் காடு' என்பதை யறியீரா. பிரபு! இனியாவது வதுவை செய்து இல்லறம் நடத்த எண்ணும்படிக் கோருகின்றேன்.

## அழகேசன் பாட்டு

(நீதியற்ற வார்த்தை என்ற மெட்டு)

இராகம் - கல்யாணி, தாளம்-ஆதி.

பல்லவி

போதுமிந்த வார்த்தை சொல்லாதே என்மந்த்ரி
போபோ என்முன்னே நில்லாதே (போ)

அநுபல்லவி

சாதுவெனவே யுன்னைத் தானே மதித்திருந்தேன்
போதிக்கும் உனதருமை புத்தியைமிகவுந் தெரிந்தேன் (போ)

சரணம்

ஆணவமிகுத்த மானிடர்க்கு கலி
யாணமே புரியத் தானடுக்கு மிதை
நானே தடுத்திருக்க வீணே மதியுரைக்க
வனே உனதுமனந் தானோ எந்தனைக்கெடுக்க (போ)

அழ. வ-ம்:—பேஷ்! நல்ல நீதி. அடடா இதுதானே மந்திரிகள் கடமை. சபாஷ் மெச்சினேன் உமது புத்தியை. மந்ரியா! எது தாமிவ்வித நீதிகளைப் படிக்கவேண்டி வந்தது. ஆம் இல்லறத்தி லிருப்பவ ரல்லவா? அதனுல் உமக்கிந்த எண்ணம் உதித்தது போலும். இனி இவ்வித மாற்றங் கூறவேண்டாம். தெரியாவிடி னும் நான் தெரிவிப்பதைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும்.

## அழகேசன் விருத்தம்

கட்டியணைத்திடும் பெண்டீரு மக்களுங் காலதச்சன்
வெட்டிமுறிக்கு மரம்போல் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டிமுழக்கி யழுவார் மயானங் குறுகியப்பால்
எட்டியடி வைப்பரோ இறைவாகச்சியே கம்பனே.

அழ. வ-ம்:—இவ்வித செய்கையுடைய பெண்டீரும் பிள்ளைகளுமா நமக்கு நல்லின்பத்தைக் கொடுக்கக்கூடியவைகள் சிற்றின்பம் சிறிய இன்பம் அதை இன்னும் ஆழ்ந்து யோசித்துப்பார்த்தால் எல்லாந் துன்பமாகவே முடியும் இத்தகைய இன்பத்தையடை யும்படி எனக்குப் புத்தி போதிக்கவந்ததும் ஆச்சரியந்தான் ஐயோ! இதென்ன அறியாமை; மந்ரியா! நமக்கு இன்பத்தைக் கொடுத்து இல்லறம் நடத்தும் பெண்களின் தன்மை யறியீர் போலும்,

## அழகேசன் பாட்டு

(சீ சீ நாரியே செல் என்ற மெட்டு)

பெண்களினுசை பொல்லாது இந்த
பேச்சுனக் காகாது என்மந்ரி (பெண்)

கண்ணிமைபுருவத்தில் கருத்தமை தீட்டுங்
காணும்வாலிபர்க்கு காமத்தை மூட்டும்
வண்ணமான தன பாரத்தைக் காட்டும்
வாழ்வைநினைக்க மனக்கஷ்டத்தில் வாட்டும் (பெண்)

அழ. வ-ம்:—பேயே பெண்ணுக அவதரித்து பேதைகளாகிய ஆட வர்களை மயக்கி நானுவிதகஷ்டத்தி லலையவிட்டு இகபரஞான மெய்த இடந் தராமல் சங்கடத்தைக் கொடுக்கும் சண்டாளி களாகிய பெண்களினுசை நமக்குத் தகுமா? மந்திரி! அவர்களின் விருத்தாந்தங்களைச் சொல்கிறேன் கவனமாய்க் கேளும்,

(ஷை மெட்டு)

உதிரம்எலும்புசதையானது தேகம்
உற்றுப்பார்க்கநாற்றமெடுக்குமே ஸ்நேகம்
அதிலுமரவப்படமானது நரகம்
ஐயையோஅதற்கென்ன அநியாய போகம் (பெண்)

அழ. வ-ம்:—மந்திரியா! எலும்புசதை இரத்தம் என்பது நிறைந்த தேகம் ஆண் பெண் இருவர்க்குமுரியதே இதுவோ நவத்து வாரங்கொண்ட நரகக்குழி. நாம் ஜனித்ததுமதிலே, சீழும் செந்நீரும் நிறைந்த வாயிலாக நாம்பிறந்த பாவமோ ஜென்ம ஜென்மத்திலும் தீராது இருக்க, அந்த ஆபாசக்குழிக்கே ஆத்திரமேலிட்டு பாத்திரங்கெட்டு க்ஷாத்திரம் விட்டு அடங்கா ஆசை கொண்டு பின்னுமதில் வீழ்ந்து பெரும்பாவந் தேடிக்கொள்வதில் என்னபலன் தவிரவும்,

(ஷை மெட்டு)

பச்சைநரம்பும் பாலும் படிந்தது கொங்கை
பார்க்கப் பகட்டுதென்ன பசப்பிது செங்கை
எச்சையூத்தைவூறும் இதழது மங்கை
என்பதிறு லென்ன இன்பமோ நங்கை (பெண்)

வ-ம்:—மந்த்ரி பளப்பளப்பாகிய பச்சை நரம்பும் அதிலூறும் பாலும் நிறைந்து தோல்படிந்து கருமங்களெல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டதுபோல் திரண்டுருண்டு கருத்த எமனைப்போல் சிறுத்த காம்பைக் காட்டி நமது மனதை வாட்டுங் கொங்கை என்பதல்லவா நரகயேணி தவிரவும் ஓயாமல் எச்சில் ஊரிக் கொண்டும் ஊத்தை நிறைந்து கொண்டும் நாற்ற மெடுக்கும் இதழல்லவா நாம் அருந்தும் அதரக்கனி. சே சே இவற்றை நினைக்கவுங் கூடுதில்லையே. இந்த அநியாய பாபத்திற் குடன்படவா என்னை விவாகஞ் செய்துக்கொள்ளச் சொல்கின்றாய். வேண்டாம் இன்னும் தெரிவிக்கின்றேன் கேள்.

(ஷை மெட்டு)

மன்மத லீலையிம் மானிடர் மாயம்
மனைவி மைந்த னெமனுகு முபாயம்
தன்மையான சாது சங்க முபாயம்
சங்கர லிங்கன் சங்கீதமே ஞாயம் (பெண்)

வ-ம்:—அற்பமாகிய இந்த சிற்றின்பக் கடலில் விழுந்து பேரின்பத்தை மறந்து பெரும்பாவம் தேடிக்கொள்வதில் என்ன பலன் காமமே குலத்தினையும் நலத்தினையுங் கெடுக்க வந்த களங்கமென்பது தெரியாதா. மேலும்,

## விருத்தம்

நிட்டையிலே யிருந்து மனத்துறவடைந்த
பெரியோர்கள் நிமலன்றாளைக்
கிட்டையிலே யிருந்து முத்திபெறு மளவும்
பெரியசுகங் கிடைக்குங்காம

வெட்டையிலே மதிமயங்கும் சிறுவருக்கு
மணம்பேசி விருப்பித்தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
கடத்துமட்டுங் கவலைதானே.

அழ. வ-ம்:—என்பதுபோல் எண்ணிலாத நெடுங்காலம் எண்ணிலாத பல பிறவி எடுத்து எடுத்து இளைத்து கடைசியாக இம்மானிடப் பிறவியி லவதரித்து பொய்யான போக இன்பத்தி லாழ்ந்து திரிவதில் என்ன பிரயோசனம். காலதச்சர்களாகிய மனைவி மைந்தர், ஏனைய பந்துக்களென்னுந் துன்பசாகரக்கட லெனக்கு வேண்டியதில்லை. ஆயுளுள்ளவரை அரனைப்பூசித்து அவனடி பெற இன்பங்கொண்டுள்ளேன். எல்லோரும் என்னுடனிருந்து ஈஸ்வரத் தியானம் செய்யுங்கள். ஜே சங்கர் மகாதேவ்.

மங். வ-ம்:—ஜே சங்கர் மகாதேவ்.

விதூ. வ-ம்:—ஜெய்ய்ய சங்கர் பம்பம்பம் லொடக் மாதேவா.

[மடத்தாச்சி பிராப்தம்]

## மடத்தாச்சி பாட்டு

(ஜெயராமமூர்த்திக்கிணை என்ற மெட்டு)

பல்லவி

வடிவேலவனுக்கிணை யானதெய்வமிந்தப்
பூதலமேலுண்டோ

அநுபல்லவி

ஆலமுண்ட வரனுக் குபதேசித்து
ஆறுமுகத்தொளிர் சீலனே மயி
லேறுமகத்துவ மூலனே தமிழ்க்
கூறும்பக்தர்க்கனு கூலனே (வடி)

சரணம்

சேல்விழியாள்வள்ளி மேல்மையலாகிய
பாலசுப்ரமண்ய ராஜனே நல்ல
பாலாபிஷேகவி லாசனே கலி
காலதெய்வம் முரு கேசனே (வடி)

சந்ததஞ்செந்தமிழ் சிந்திசைபாடிடுஞ்
சங்கரலிங்கன் சகாயனே உல
கெங்கும் புகழ்கார்த்தி கேயனே மலை
தங்கிவாழுந் தியாக ராயனே (வடி)

தோழி. வ-ம்:—சித்திரக்ஷேத்திரபுரத் தரசியின் தோழியாகிய நான் இச் சந்யாசி கோலத்துடன் அழகேச ராஜனுக்குத் திருமணக் கடிதங் கொண்டுவந்திருக்கின்றேன் அரசனைக் காணவேண்டும் இதோ இக்காவலனை விசாரிப்போம். ஜே சங்கர் மகாதேவ் அப்பா அரசனிருக்கின்றாரா?

விதூ. வ-ம்:—ஜெய் சங்கர் பம்பம் லொடக் மாதேவ் இருக்கின்றார் நீயார்?

மடத். வ-ம்:—நான் வடதேசம் அரசனைக்காண வந்திருக்கின்றேன்.

விதூ. வ-ம்:—அப்படியா; ஆனால், நீ ஆணா பெண்ணா?

மடத். வ-ம்:—இதென்ன உன் கேழ்வி விசித்திரமாக இருக்கின்றதே;

விதூ. வ-ம்:—நீ சித்திரமாக வந்திருக்கின்றாய். அதனாலென் கேழ்வி விசித்திரமாக இருக்கின்றது. அதிருக்கட்டும் கேட்டதற்கு பதில்சொல் ஆணா பெண்ணா?

மடத். வ-ம்:—ஆணுமல்ல பெண்ணுமல்ல.

விதூ. வ-ம்:—ஆணுமல்ல பெண்ணுமல்ல. ஆனால், அதிலேபாதி இதிலே பாதியோ?

மடத். வ-ம்:—அப்பா அப்படியல்ல; நான் பெண்தான் ஆயினும், சிறு வயதுமுதல் சந்யாசி வேடம் புனைந்து வேதாந்திகளுடன் சேர்ந்து இல்லறத்தை வெறுத்து துறவறம்பூண்டு அடியார்களுக் குத் திருப்பணி செய்து வருகின்றேன்.

விதூ. வ-ம்:—நல்லது இப்போதிங்கு வந்தகாரணம்.

மடத். வ-ம்:—நான் ஓர்மடாலயங்கட்டி வருகின்றேன். அதன் செல வுக்காக அனேக இராஜர்களிடம் சென்று தர்மம் வாங்கி வரு கின்றேன். ஆதலால், தற்சமயம் இவ்வூரரசரையுங்கண்டு போக வேண்டி ஓர்சீட்டுக் கவிபாடிக்கொண்டு வந்திருக்கின்றேன்.

விதூ. வ-ம்:—உன் பெயரென்ன?

மடத். வ-ம்:—மடாலயப்பணிசெய்து வருவதால் மடத்தாச்சி என் பார்கள்.

விதூ. வ-ம்:—நல்ல திங்குதானிரு. அரசனிடம் சென்று உத்திரவு பெற்று வருகிறேன்.

[அழகேசனிடம் சென்று வணங்கி]

வ-ம்:—பிரபு! ஓர் சந்யாசிப்பெண் மடத்தாச்சி என்னும் பெயர் கொண்டவள் தேவாலய திருப்பணி கைங்கரியதத்துக்காகத் தங் கள் பேரிலொரு சீட்டுக் கவிபாடிக் கொண்டுவந்திருக்கின்றாள். தங்களைக் காணவேண்டுமாம்,

அழ. வ-ம்:—அவளை இங்குவிடவேண்டாம் அந்தக் கடிதத்தை வாங்கி விபூதித்தட்டில் வைத்துக்கொண்டுவா.

[விதூஷகன் மடத்தாச்சியிடம் கடிதத்தை வாங்கித் தட்டில் வைத்துக் கொடுக்க அழகேசன் வாசித்தல்]

ஆசிரிய விருத்தம்

சீர்பெற்ற அளகாபு ரிக்கிறைவ ரேயுமது
திருமலர்ப் பாத மேற்றி
சித்ரக்ஷேத் திரபுரத் தரசியாம் லலிதாங்கி
திருமுகச் செய்தி காண்க
பேர்பெற்ற வெனதுதாய் தந்தையரு மக்கென்னை
பெருமைசேர் மண முடிக்கப்
பேசியிவ் வுலகைப்பி ரிந்தமேதோர் செய்தியிப்
பேதைநா னின்ற றிந்து
தார்பெற்ற திருமணம் புரியவென் சகிதனைத்
தன்னகர னுப்பி வைத்தேன்
சங்கதியெ லாமறிந் திங்குவந் தென்னையிச்
சகமறிய வதுவைசெய்து
தேர்பெற்ற வெந்நகரை முடிசூடி வாடாத
செங்கோல் செலுத்தி நாளுஞ்
சித்தரஞ் சிதமான சுத்தமன் மதலீலை
செய்தென்றும் வாழ்கு வீரே.

[அழகேசன் கடிதத்தைக் கீழே போட்டு விட்டுக் கோபத்துடன் பாடுவது.]

## அழகேசன் பாட்டு

(சாரங்கந்தன்னிலோர் என்ற மெட்டு)

இராகம்-அடாணா, தாளம்-ரூபகம்.

பல்லவி

இந்தக்கடிதத்தைக் கொண் டிங்குவந்த காமாட்டி—தன்னை
எட்டி யுதைத்துப்பல் தட்டியனுப்படா வாட்டி

அநுபல்லவி

அந்தரங்கமாக என்னை மயக்கவே
அச்சமின்றிநல்ல லச்சைவிட்டேகவே (இந்)

சரணம்

மன்னவனெந்தன் நிலையுணராமல்
யாமணம் சூடிட நாடி அந்த
மங்கைமனதில் நினைந்தவிதமென்ன
மாயமிது முனம் வோடி
சந்யாசி என்றிங்கு சார்ந்த நீலிதன்னை
தக்ஷணமேயுதைத் திக்ஷணமோட்டுவீர் (இந்)

அழ. வ-ம்:—இந்தக் கடிதத்தைக் கொண்டுவந்த அந்தத் திருட்டுச் சிறுக்கியை நமது நகரத்துக் கப்பா லோட்டிவிடு.

[சேவகன் மடத்தாச்சியிடம் வந்து]

விது. வ-ம்:—ஹே மடத்தாச்சி! இங்குவா.

மட. வ-ம்:—அப்பா! அரசர் என்ன தெரிவித்தார்.

விது. வ-ம்:—அரசர் மடத்தாச்சி இடத்தைவிட்டுக் கடத்தாச்சி என்று நல்ல வெகுமானங் கொடுக்கச் சொன்னார். இந்தா பெற்றுக்கொள்.

[அடிக்கின்றான் ஓடிவிடுகின்றாள்]

மந். வ-ம்:—அரசே! தங்களின் நற்கால பலத்தை முன்னிட்டு தானே விரும்பிவந்தத் திருமணத்தைத் தடுப்பது நல்லதல்ல. வார்த்தையைத் தட்டாம லம்மாதை வரவழைத்து வதுவை செய்துகொள்வதே நலம்.

அழ. வ-ம்:—மந்திரியா! இதென்ன மூடமதி. இன்னுமிவ்வித யோசனை கூறுவது நல்லதல்ல. தெரிவிக்கின்றேன் கேளும்.

## அழகேசன் விருத்தம்

சேய்கொண்டாருங்கமலச் செம்மலுடனேயரவப்
பாய்கொண்டானும்பணியும் பட்டீச்சுரத்தானே
நோய்கொண்டாலுங்கொளலாம் நூறுவயதாமளவும்
பேய்கொண்டாலுங்கொள்ளலாம் பெண்கொள்ளலாகாதே.

அழ. வ-ம்:—இப்படிப் பெரியோர்கள் சொல்லியிருக்கும் உண்மையறியாமல் அடிக்கடி என்னை வற்புருத்திக் கூறுவது நல்லதல்ல. ஐயோ நினைக்க நினைக்க மனம் பதருகின்றது. வீணாக அம்மாயாசக்தியி லகப்பட்டு பிரபஞ்ச வாசிகள் யேனோ இப்படி திரிந்தலைகின்றார்கள். கலியாணம் கலி - சனியனானவன். ஆணம் - தொடர்வது. தன்னைப் பிடிப்பது. சனியன் கூற்றுக் குட்படு மிதனைக் கவுரவமாகக் கலியாணமென்று சொல்லி அலைகின்றார்கள்,

## அழகேசன் பாட்டு

இராகம்-ஆரபி, தாளம்-ஆதி.

பல்லவி

எடுத்துச்சொல்லாதே மணம்செய்துகொள்ள
ஏனேயேனுவுமக் கித்தனைதொல்லை
எனதுமனமதனைக் கலைப்பது சரியல்ல (எடு)

அநுபல்லவி

தடுத்துத்தடுத்துச்சும்மா அடுத்துஅடுத்தெனிடம்
தொடுத்துத்தொடுத்துவார்த்தைபடித்துப்படித்துயின்னம்(எடு)

சரணம்

வாலிபகாலத்திலாம் கலியாணம்
மானிடவாழ்வுக்கதே வெகுஊனம்
தாலிக்கயரல்லவோ எமபாணம்
தானறியாதவர்க்கே யவமானம் (எடு)

திருமணமென்பது தேசத்தின் வாக்கு
செய்கின்ற மானிடர்க் கேதுசெல் வாக்கு
தருமதுற வறத்துக் கேனேபோக்கு
சங்கரலிங்கன் சங் கீதங்கற்றோர்க்கு (எடு)

அழ. வ-ம்:—இவ்வித பாபகிருத்தியங்களுக் கேதுவான விவாகம் செய்ய நான் ஒருக்காலும் சம்மதிக்கேன். ஆதலின், இனிமே லிவ்வித நீதிமொழிகளை அடிக்கடி என்னிடம் பேசவேண்டாம் ஜேய் சங்கர் மகாதேவ்.

விது. வ-ம்:—ஜேய்ய்ய் சங்கர் பம்பம்பம் லொடக்மாதேவா.

## அழகேசன் பாட்டு

(தாதாபாய்நௌரோஜி என்றமெட்டு)

பல்லவி

தாதாநின் தரிசனமே தாதா
தந்தாளுஞ்சிவ கந்தாதருணம்

அநுபல்லவி

ஆதாரம்வேறுதுணை ஆருமில்லைப்பாருமெனை
அழகியமலை மகனெனதமிழ் கழகமேபுகழ் பழநிவேலனே (தா)

(தொகையறு)

பாதார விந்தத்தைப் பற்றினேன்
பாலனென்றுயர் நீங்கவே
ஆதாரமாய்வந்து காத்தருள்வாய்
நல்லசுக மோங்கவே.

பாட்டு

ஆறுமாமுகவினோதா ஆடுமயிலேறும்பாதா
அனுதினந்துதி சங்காலிங்கனின்
மன துலவிடுஞ் சண்முகநாதனே (தாதா)

(சீன்முடிவு)

சீன்—5. இடம்-மாளிகை.

நடிகர்:—லலிதாங்கி, தோழிகள், மடத்தாச்சி.

லலி. வ-ம்:—பாங்கியா? சென்றசகி இன்னும் வரக்காணோமே காரணமென்ன?

தோழி. வ-ம்:—அம்மா! வந்துவிடுவாள்; தாங்கள் யாதொன்றுக்கும் வருந்தவேண்டாம்.

லலிதாங்கி பாட்டு

(சென்றசித்ரலேகை என்ற மெட்டு)

கண்ணிகள்

சென்றமடத் தாச்சி யின்னுஞ்
சேதிகொண்டு வாராதென்ன
இன்றவளைக் காணுவிடில்
என்மனம் வாடுமே முன்னஞ் (சென்)

எனைமறந்தாளோ எதுநினைந்தாளோ
எங்குசென்றாளோ இடமறிந்தாளோ (சென்)

நாதனைக்கண்டாளோ நானங்கொண்டாளோ
போதனைசெய்தாளோ புகலுவாய்தோழி (சென்)

வ-ம்:—பாங்கியா! பாழும் மன்மதாவஸ்தை என்னை மென்மேலும் வாட்டுகின்றதடி? சென்றவள் இன்னும் வரக்காணேனே? என் செய்வேனடி?

[மடத்தாச்சி வருகின்றாள்]

தோழி. வ-ம்:—அம்மா! இதோ வந்துவிட்டாள்.

[மடத்தாச்சியின் கரத்தைப் பிடித்துக்கொண்டு]

லலி. வ-ம்:—தோழி! விசேடமென்னடி? சென்ற காரியம் ஜெயம் தானா?

## லலிதாங்கி பாட்டு

(வசுனாலேனாலே என்ற மெட்டு)

அடி—மாதேநீதான் சென்றகாரியம்
காயாபழமா மகிழுட னுரைப்பாய்—சந்தோஷ
சுபமணம் பெறுவாய் (அடி)

நாதனுன்னைக்கண்டுமரி யாதையேதும்செய்தாரோ
மாதுளந்தன் கடிதங்கண்டு காதல்மிகக்கொண்டாரோ (அடி)

நித்திரையுமற்றிரவில் மெத்தமனம்வாடியே
எத்தினம்நீ வருவாயென்று இருந்தேனடிசேடியே (அடி)

லலி. வ-ம்:—சகி எப்போது வருவாயென்று வழிமேல் விழிவைத்துப் பார்த்துக்கொண் டிருந்தேன். சென்ற காரிய மென்ன வாயிற்று. எனது பிராணபதி என்னை மணம்செய்ய எப்போது வருவதாகத் தெரிவித்தார்.

மட. வ-ம்:—அம்மா! தங்களுத்திரவின்படி நானிச் சந்யாசி வேடத்துடன் அங்கு சென்று லிகிதத்தைக் கொடுத்தனுப்பினேன். அவரதை வாசித்துப் பார்த்துக் கோபமேலிட்டு யாதொரு பதிலும் தெரிவிக்காமல் சேவகனிடம் சொல்லி என்னை அடித்துத் துரத்திவிட ஆக்யாபித்தார். இதோ என் முதுகைப்பாரும்.

[லலிதாங்கி கோபாவேஷத்துடன்]

## லலிதாங்கி பாட்டு

ஆ ஆ அப்படியும் சொன்னதவனுண்மையா (ஆ)
எப்படியாகிலும் நானவனிடம்சென்று
ஒப்பிடச்செய்குவேன் பாரடிசகியே
இந்தக்ஷணம் செல்லுகின்றேன் (ஆ)

லலி. வ-ம்:—பாங்கியா இவ்விதமாக உன்னை அவமானம் செய்தனுப்பிய அந்த மதிகெட்ட மன்னனை நான் எப்படியாவது மண முடித்து வருகின்றேன். நான் வரும்வரை இராஜ்ஜியத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

மட. வ-ம்:—வேண்டாமம்மா தாங்கள் சென்றாலும் அவமானமடைய நேரிடும்.

## தர்க்கம்

(வண்டுகோண்டு வந்தேன் என்ற மெட்டு)

லலி. அங்கு சென்று நானே கண்ணால் கண்டு தானே
மணஞ் செய்கு வனே சுபம் சொல்லு வேனே

ஆஹா பாங்கியரே சுந்தராங்கியரே
மோகனங்கியரே விடைதருவீரே

தோ. வேண்டாமங்கு சென்றால்தீங்கு
நேருமே சொன்னோமே

லலி. ஆஹா அப்படியா அவனின் கெருவமடக்குவேன் (அங்)

தோ. செல்வதுநீ நல்லதல்ல மெல்லியரே நின்றிடுவாய்
சொல்லுமெங்கள் சொல்தடுத்தால்
அல்லல்நேரு மிதையறிவாயம்மா

லலி. ஆஹா அப்படியா அவனின்கெருவமடக்குவேன் (அங்)

[செல்கின்றாள்.]

(சீன் முடிவு.)

**சீன்-7.** **இடம்-பூஜாமடம்.**

**நடிகர்:—அழகேசன், லலிதாங்கி, விதூஷகன்.**

## அழகேசன் பாட்டு தேவாரம்

மருவார்கொன்றை மதிசூடி
மாணிக்கத்தின் மலைபோலே
வருவார்விடைமேல் மாதோடு
மகிழ்ந்துபூதப் படைசூழ
திருமால்பிரம்மா விந்திரர்க்குந்
தேவர்மூவர் தானவர்க்கும்
பெருமான்கடவூர் மயானத்து
பெரியபெருமா னடிகளே

வ-ம்:—ஜெ சங்கர் மகாதேவ்;

விதூ. வ-ம்:—ஜேய் சங்கர் பம்பம் லொடக் மாதேவா;

[அழகேசன் நிஷ்டையிலமர விதூஷ கன் நித்திரை செய்கின்றான் லலி தாங்கி பிராப்தம்.]

லலி. வ-ம்:—இவ்வழகாபுரியின் உன்னதம் இந்திரலோகத்துக்கு மிராதென்னலாம். இதுதான் அழகேஸ ராஜனின் பூஜாமடம் போல் தெரிகிறது ஆ ஹா! இது என்ன நேர்த்தியாக ஜோடிக் கப்பட்டிருக்கின்றது எல்லாம் வைதீக மார்க்க சித்திரங்களா கவே தோற்றுகின்றன. நறுமணவாசம் நாலுதிக்கும் வீசுகின் றது எங்கே இங்கவரைக்காணோமே.

[சுற்றிப் பார்த்து அழகேசனைக் கண்டு பிரமித்து நின்று]

வ-ம்:—இதென்ன தோற்றம் கோடிசூரியப்பிரகாசம் போலல்லவோ தெரிகின்றது. ஆம்; இவர்தான் அழகேசராஜன் போலும் அடடா! பெயருக்கேற்ற உருவம் வுருவத்துக்கேற்ற பருவம் எல்லாம் பொருத்தமாகவே அமைந்திருக்கின்றதே இந்த அழகையும் பருவத்தையும் சுகபாக்கியத்தையும் பெற்ற இவ் வங்கஜக்ரீடிபெண்க ளின்பத்தை வெறுத்திருக்குங் காரணம் யாதோ? எந்தப்பாபிகளின் சாபமோ ஐயோ பெண்ணாய்ப் பிறந் தால்மட்டும் போதுமா? இவர்போன்ற எழில் மிகுந்த மன்னனை மணம் செய்யும் பாக்கியமன்றோ பெண் ஜென்ம விமோசனம் அதிலதேல் பெண்களாய்ப் பிறந்தும் பயனில்லை.

## விருத்தம்

தருமமதைவிடவேறு சிலாக்யமில்லை
சாந்தமதைவிட வுலகில்பக்தியில்லை
குருவைவிடசீடனுக்கு தெய்வமில்லை
கோபமிலாமானிடர்க்கு பாபமில்லை
அருமறையையுணர்ந்தவர்க்கு ஆபத்தில்லை
அழகிலாபெண்களுக்கு ஆசையில்லை
புருடர்களில் இவனைவிடச்சிறந்தோரில்லை
இவன்-போகமேமாதருக்குப் புண்யமாமே.

## லலிதாங்கி பாட்டு

(ஜெயசாலி இவனது என்ற மெட்டு)

இராகம்-தோடி, தாளம்-ரூபகம்.

ஜெயவீரசுபகர தீரசுகுணசிங்
காரணிவன் யாரோ
யாரோ யாரோ யாரோ (ஜெய)

அயனே இவனை எனக்காகப்
படைத்தனனே வரசர்பெருமான்
இவனே மதனகுணவான்
சுகமே மிகவும்தருவான்
தனவான் ஜனவான் கனவான் (ஜெய)

இடையுமிவனிரு துடையுமழகிய
வுடையுமெனை வாட்டுதே சுக
நடையுமாவ லூட்டுதே ராஜ
நயனமுகங் காட்டுதே
மீறுதே சீறுதே கோருதே (ஜெய)

துங்கதேச விலாசசங்கர
விங்கதே சிகனே திரு
மங்கைநா யகனே மலர்
நங்கைகா முகனே
அரனே பரனே வரனே (ஜெய)

வ-ம்:—யாரென்றுரைப்பது? தேவேந்திராதி தேவனே? திரிமூர்த்திகளிலொருவனே? இல்லை எனக்கேன்றே உருவெடுத்துப் பிறந்தவனே? பிரம்மதேவனே? இம்மானுடாவதாரத்துடனிங்கிருக்கின்றனே? இப்படியும் உலகில் ரூபலாவண்யமுற்ற பரமபுருஷோத்தமனிருப்பானென்று நான் கனவிலுங் கருதவில்லை. இன்றல்லவோ கண்டேன்.

## லலிதாங்கி பாட்டு

(மாரன்வாதையினல் என்ற மெட்டு)

பல்லவி

கண்டனனந்தமே காணக்கண்கள் செய்தபாக்யம்
பெண்களுக்கே சிலாக்யங் (கண்)

அநுபல்லவி சந்தத்தொடர்

கனத்த தனத்தி விணைத்து
அணைத்து மகிழ்ச்சி யளிக்கக் (கண்)

கருதிய கலவியி லாடிப்
பெருகிய மதனகி ரீடிக் (கண்)

கதிரவ னுலவிய புவிதனில்
அழகிய மதிமுக ரமணனைக் (கண்)

சரணம்

மண்டலமெங்கும் வணங்குமந்தகாசன்
மங்கையர் தம்முள்ளந் தங்குமழகேசன்
தண்டமிழ்சங்கர லிங்கன்மகிழ்நேசன்
சங்கீதநாடகத தின்பவுல்லாசன்

தாணியிலெனக்கிவன் ஜோடித்
தகுபொரு சரஸ கிரீடிப்
பரவியமலரணை நாடிப்
பைரவி சிந்துகள் பாடிக் (கண்)

லலி. வ-ம்:—காலமுழுதும் இவனது அழகை வர்ணிக்க ஆதிசேடனுலு மாகாது. நான் இவ்விதம் வர்ணித்துக்கொண்டிருந்தால், பிரயோசன மேற்படாது. வந்தவேலையை முடிக்க வேண்டும்.

ஆம் இவர் யேதோ தன்னை மறந்திருப்பதாகத் தெரிகிறது. நாமே வலிய இவரது நிஷ்டையைக் கலைப்போம்.

[அழகேசனை நெருங்கி கையிலிருந்த புஸ்தகத்தை பிடித்திழுக்க ஆசனம்விட்டெழுந்திருக்கின்றான். லலிதாங்கி அவ்வாசனத்தமர்ந்துகொள்கின்றாள்]

அழ. வ-ம்:—என்ன இது. மாயாஜாலமாக விருக்கின்றது. பார்வைக்குப் பெண்ணுருவாகத் தோற்றுகின்றது. கட்டுக் காவலைக் கடந்து இங்கு வந்ததுமன்றி எனது ஆசனத்தி லமர்ந்துக் கொண்டனளே. என்ன தைரியம். அடே காவலா! யாரிவள் இங்கெப்படி வந்தாள்.

காவ. வ-ம்:—பிரபு! அதிகமாக நித்திரை செய்யவில்லை. கண்ணை மூடிக்கொண்டு படுத்தேன். இது பூதமோ பிசாசோ மோகினி டாகினியோ தெரியவில்லை. எப்படியோ வந்துவிட்டது. யாரென்பதைத் தாங்களே விசாரித்துப் பாருங்கள்.

## தர்க்கம்

அழ. நீயார் யார் யார் எந்தவூர் வூர் வூர்
என்ன பேர் பேர் பேர் அதை கூர் கூர் கூர்
அஞ்சாமலே யிங்குவந்து
கொஞ்சியே நின்றிடலாணு யார் நீயார் நீயார்

லலி. பார்மகிழு மன்னனே பகருவேனுன் கேள் கேள்
பாவையுந்தன் தேவிலலி தாங்கியாமென் பேர் பேர்

அழ. சீ சீ என்னவார்த்தை சொல்லவந்தாய்
கொஞ்சமும் பயமில்லாமல் யார் யார்

அழ. வ-ம்:—நான் கேட்டதற்குத் தகுந்தபதில் சொல்லாமல் வாயில் வந்தபடி பினத்துவது சரியல்ல எங்கிருப்பது எதற்காக இங்கு வந்தாய். விவரமாகச்சொல். சீக்கிரம்;

லலி. வ-ம்:—சித்திரக்ஷேத்திர புரத்தரசி. என்பெயர் லலிதாங்கி எனது மனக்கருத்தை ஓர் லிகிதத்தெழுதி தோழி யிடங் கொடுத் தனுப்பினேன். அதற்கு பதில் தெரிவிக்காததினுல் நானே நேரில் கண்டு போகலாமென்று வந்தேன்.

அழ. வ-ம்:—மகா கெட்டிக்காரிதான். அக்கடிதக் கருத்துக் கென் மனம் இசையாதென்பதை அவளிடந் தெரிவித்து அனுப்பினேனே. அதை யறியாமல் இங்கு வந்து இப்படி பேசுவது நன்மையல்ல சென்றிடுவாய்.

## லலிதாங்கி பாட்டு

(அமாரநபிஅஜி என்ற மெட்டு)

பல்லவி

ஆசையானேன் காம ராஜாவுன்மேலே (ஆசை)

அநுபல்லவி

ராஜாவுன்மேலே நங்கையின்னுளே (ஆசை)

சரணம்

மோசம் செய்யாதே மோகம் பொல்லாதே
நேசவிலாச மனோகரனே இந்த
நேரஞ் சீமானே (ஆசை)

பூத்ததுமோகம் பூமதன்போகம்
சேர்த்தணைத்திடுவதே சையோகம் இன்னு
மேனோ சந்தேகம் (ஆசை)

அங்கஜன்பாணம் ஆனந்தகானம்
சங்கரலிங்கன் செந்தமிழ்தியானம் சாமி
யேனோ நிதானம் (ஆசை)

வ-ம்:—என் ஆசையைத் தணிப்பதற்கு இதுவே நல்ல சமயம் பதில் பேசாமல் விவாகம் செய்துகொள்வதுசிதம். சம்மதந்தானே?

## அழகேசன் பாட்டு

(நாளே நல்லநாளடி என்ற மெட்டு)

பல்லவி

வாதுசெய்யாதே போபோ (வாது)

அநுபல்லவி

வாதுசெய்வ துனக்கடாது
எந்தன்முன்னே நில்லாது
இடம்விட்டு இப்போது செல்லுவாய் மாது (வாது)

சரணம்

சீ சீ இதுதா னென்னபேச்சி
உலகமெல்லாம் ஏச்சி
வருகுமடி ஆச்சி எனக்குநீயே (வாது)

நானே உந்தனை மருவேனே
சரஸம் புரியேனே
தருமோயிதுதானே தையலர்மானே (வாது)

வ-ம்:—இனிமறுமுறை இவ்வித வார்த்தைபேசாதே. நானோர் துறவி இந்த இராச்சியபாரத்தையே வெறுத்திருக்கின்றேன். ஆதலின் உன் இஷ்டத்திற் குடன்படமுடியாது மரியாதையாக வந்த வழிபார்த்துச் செல்.

லலி. வ-ம். இவ்விதம் புகல்வது தருமமா. பெண்ணென்றால் பேயு மிறங்குமே. உமதுமன மிறங்காததென்ன விந்தை. வீணாக இந்த வாலிப காலத்தைக் கெடுத்தலைவது நல்லதல்ல.

## லலிதாங்கி விருத்தம்

பிறப்பது நலமென் பார்கள்
　　பிறந்தபின் புவியி லந்தோ
இறப்பது நலமென் பார்கள்
　　இரண்டையும் வேண்டா மென்று
மறுப்பதிற் ஜெனனம் போமோ
　　மன்னவா அதுபோ லென்னை
வெறுப்பதிற் பலனுண் டாமோ
　　வேண்டினே னணைகு வாயே.

## லலிதாங்கி பாட்டு

(முருகனே கலியுகத்தினில் என்ற மெட்டு)

பல்லவி

வெறுப்பதால் பலனென்ன　　யென்னை
விரும்புவாய்மன்னா　　சம்பன்னா　　(வெ)

விஸ்தார மானகஸ்　　தூரிமணமதை　　(வெ)

அநுபல்லவி

மறுப்பதால்　　மோகந்தீராது
மையற்பயித்தியஞ்　　செய்யும் வயித்தியம்　　(வெ)

சரணம்

பொருத்தமுஞ்சரி　　யமைந்திருப்பது
புஷ்யமுகூர்த்தம　　கத்வமிகுத்தது
வருத்தமென்ன　　மனத்திலுதிப்பது
வாதுசெய்யாதுயிப்　　போதுமாது என்னை　　(வெ)

ஆணுக்கும் பெண்ணுக்கு　　மானதிம்மோகம்
அந்தவிதமறிந்　　தேனிந்தசோகம்
தோணுஞ்சங்கர　　லிங்கந்தமிழ்த்தியாகம்
சொல்லுங்கல்யாணச்　　சுகிர்தவிவாகம்　　(வெ)

லலி. வ-ம்:—பிராணேசா! வீணுக வெறுத்துப் பேசுவதில் பலனில்லை. இந்த உருட்டு மிரட்டுக்கு அஞ்சுவேனென் றெண்ண வேண்டாம். பாழாய்ப்போன துறவறத்தைக் கட்டி யலைவதில் என்ன லாபம். இல்லறமல்லது நல்லறமன்று என்றுரைத்த பெரியோர் மொழி தெரியாதா? நல்ல வாலிபகாலத்தை என் வீணிற் கழிக்கின்றீர். இன்ப சுகம்பெற இதுவே தருணம் வாரும்.

## அழகேசன் விருத்தம்

காமத்தைத் தலைமேற்கொண்டு கற்பெனும் பசும்பொன்னை
க்ஷேமத்தைக் கெடுக்கலாமோ தேசத்தோ ரேசப்போமோ
ஆமித்தை யறிந்தோநன்று யருந்ததி என்னுமாதின்
நாமத்தைப் போற்றிசெய்து நலமுடன் வாழ்குவாயே.

## அழகேசன் பாட்டு

(தாறுமாருய்ப் பேசுகின்ருய் என்ற மெட்டு)

இராகம்-காட்டைகுறிஞ்சி, தாளம்-ஆதி.

பல்லவி

ஏதுவாது வோதுகின்ருய் இப்போது (ஏது)

அநுபல்லவி

பூதலத்தோரேச மாதென்மனங்கூச (ஏது)

சரணம்

காதகப் பெண்ணுளே காமத்தால் மண்மேலே
நீதிமாறலாமோ நேரிலென்னைக் கோரலாமோ (ஏது)

அற்பசுகமீதே அதற்காயிப்போதே
கற்பைவிற்கலாமோ கண்டோ ரேசப்போமோ (ஏது)

அழ. வ-ம்:—இந்த அற்ப சுகத்துக்காக விலையிலா மாணிக்கமாகிய உன் கற்பைக் கெடுப்பது நல்லதல்ல. நானோ சங்யாசி; வேறு புருஷனைப் பார்த்து உன் இஷ்டத்தைத் தீர்த்துக்கொள். சென்றுவிடு.

## லலிதாங்கி, அழகேசன் தர்க்கம்

(புதுமைச்சித்திரப் பதுமை என்ற மெட்டு)

லலி. விரித்தபஞ்சணை தனித்திருக்குதுபார்
உந்தனைச்சேர மிகமகிழுடன் மனமயங்குதுபார்-இந்த
வேளை எந்தனை வோடிவந்தணை
வாடிநின்றனை யேதுகாரணம் (விரி)

அழ. மரித்திழுத்தென்னை வருத்தஞ்செய்யாதே உந்தனைக்கூட
மதிபிசகி என் மனமிசையாதே-இந்த
மானிலந்தனி லேமனந்துணி
வானபெண்களி லேசமர்த்தினி (மரி)

லலி. வெறுத்துச்செல்லவும் பிடித்திழுக்குதுபார்
வில்லாளிமாரன் விடுத்தகணைகள் அடுத்துருக்குதுபார்-நல்ல
விகசிதசுக மிலகியநய
ரகசியமொடு சரஸம்புரிய (விரி)

அழ. பெருத்தமதத்தைக் கருத்திற் கொள்ளாதே
பூமீதுசெங்கோல் பிடித்ததவத்தைக் கெடுத்தலையாதே-இந்த
பேதகமதி யேன்விலகிடு
நானுனைமரு வேனடம்விடு (மரி)

அழ. வ-ம்:—பன்னிப்பன்னி பேசுவதிற் பலனில்லை. காமப்பிசாசே! அறிவற்ற அசடே! புத்தியில்லை? மானயீனமில்லை? வெட்கமில்லை? மதம்பிடித்த மசகே! இனி என்முன் நிற்காதே; பின்னமடைவாய். நன்மையாய் சென்றுவிடு.

லலி. வ-ம்:—செல்வதற்காகவா இங்கு வந்தேன். நீரென்ன சொன்னாலுஞ் சம்மதமே. மனைவியை மன்னன் வெறுப்பதும் பின் விருப்பத்தோ டணைப்பதும் சகஜந்தானே. இதில் தவறொன்றுமில்லை நாதா!

## தர்க்கம்

லலி. என்முறண்டு செய்கின்றீர்
என்னைக்கூட வைகின்றீர்

அழ. நானேவுன்னை மருவிடேன்
நடடிப்பெண்ணே நாடோடி

லலி. ஆண்மைத்தன மில்லையா

அழ. அதைக்கேட்காமல் செல்லாயா

லலி. உமக்கது இல்லை.

அழ. எது இல்லை.

லலி. புருஷ பௌருஷமில்லை.

அழ. அது இல்லை.

லலி. ஏனில்லை.

அழ. அதுயேனோ.

லலி. என்முறண்டு செய்கின்றீர்.

லலி. வ·ம்:—தானே வந்த சீதேவியைக் காலாலுதைத்துத் தள்ளுவா ருண்டா. கரும்பு தின்ன கைக்கூலியா. பிராணபதி வேண்டாம். என் பெற்றோர்கள் உம்மையே எனக்குரிய மணாளனாக எண்ணி யிருந்தார்கள். அதன்படி நானும்மைக் காதலித்தேன். துரையே என்னை மென்மேலும் வருத்தாமல் வதுவை செய்யவாரும்.

## லலிதாங்கி பாட்டு

(பண்டாரந்தேண்டாயுதபாணி என்ற மெட்டு)

பல்லவி

கல்யாணமே வைபோகமே
காணுங் கண்ணானந்தமே
கருத்திற்கிசைந்த பொருத்தமமைந்த
விருத்திக்குகந்த திருப்திநிறைந்தது (கல்)

அநுபல்லவி

இல்லாத மானிடரேது
எல்லோர்க்கு மேயிதுபொது
உல்லாச மானபால்யம்
வுனக்குமெனக்கு முகந்ததினமிது (கல்)

தொகையறு

இல்லற மல்லது நல்லற மன்றென்
றியம்பு மொழி மாறலாமோ
சொல்லருந் துறவறப் பெருமையில் லறமதைச்
சோதித்தல் நியாய மாமோ

பாட்டு

சுந்தரா னந்த விலாசா
மங்கைமார் தங்கள் சுகேசா
சந்தமார் தண்டமிழ் வாசா
தருண மெனது பருவ வயது
சரிசரி மதன் சரஸ மேதருங் (கல்)

தொகையறு

காந்தர்வ லீலையே வேந்தர்க்குச் சிலாக்கியங்
கருதுவி ரந்த பாக்யம்
ஆந்தரும வாக்கியம் ஆகுமா ரோக்கியம்
அழகேச ராஜ மன்னா

பாட்டு

அற்புதசெந் தமிழ்மகள் பூமி
விற்பனசங்கர லிங்க சாமி
புகழ்லலி தாங்கியின் நேமி

கணவ னுனது கலவிக் கினிய
மனைவி எனது மனதுக் குறிய (கல்)

லலி. வ-ம்:—அனாதையான ஓர் பெண் நாணம்விட்டு ஓர் ஆடவனைக் கோரி வீடேறிவந்து மருவ அழைத்தால் மறுத்துரைப்பது தர்மமா. இது க்ஷத்திரியருக்கழகா. தாமே யோசித்துப் பாரும்.

## அழகேசன் விருத்தம்

வேதசாஸ்திரம்போதித்த விமலசற்குருமேலாணை
மாதரைவிரும்புகின்ற மார்க்கத்தார்கூட்டஞ்சேரேன்
காதலென்மேல்வைத்தென்ன காணுவாய்பாவாய்போவாய்
பூதலத்தனேகருன்னைப் புகழ்ந்தேற்றிக்கொள்ளுவாரே.

## அழகேசன் பாட்டு

(மீனாக்ஷிரமண என்ற மெட்டு)

பல்லவி

காமத்தால்வாடிக் கத்தாதேபோடி பாழுங் (காம)

அநுபல்லவி

மாமதப்பேயே மதியல்லநீயே
மனத்தில்கொண்டுள கனத்தவங்கஜ
நினைப்பையிங்கித மெனத்தெரிந்துமே (காம)

சரணம்

சீசீநிர்மூடி செல்லுவாயோடி
திடமுடனுனதொரு மடமதிவிலகிட
சொலுமெனதொரு மொழிதனைமனமதில்நினை (காம)

சங்கீதராஜன் சகலவிலாசன்
சந்தச்சங்கர லிங்கச் செந்தமிழ்
சிந்தைச் சந்தத மன்பிற்கொண்டுயர் (காம)

அழ. வ-ம்:—கேவலம் பெண்ணாயிற்றே என்று நினைக்கின்றேன். வீணாகப் பெரிய ஆபத்துக் காளாவாய். வெளியில் சென்றுவிடு. ஜே சங்கர் மகாதேவ்.

சே. வ-ம்:—ஜேய்ய்ய் சங்கர்ர்ர் பம்பம்பம்பம் லொடக்மாதேவா,

## அழகேசன் லலிதாங்கி தர்க்கம்

(ஏதுயேதுன்பாதமே என்ற மெட்டு)

லலி, காமபாண மீறுதே கலந்திடவருவாய்
நலந்தனைப்பெறுவாய்

அழ. காமாந்தகார நீலியே உனக்
கறிவில்லையே தறு தலையே
கற்பதைக் கெடுத்தல் நீதியோ

லலி. சோமனனல் தூவுதே சுகமது தருவாய்
அகமது மகிழ்வாய்

அழ. துஷ்டையே எட்டி நில்லடி மனத்
துயரடைவாய் பெயர் கெடுவாய்
துற்புத்தி யேனோ செல்லடி

லலி. தாமதமீ தாகுமோ சரஸ சுந்தரா
விரக சந்திரா

அழ. சங்கரலிங்கன் சாக்ஷியே சொன்னேன்
தவறியெனை மருவநினைத்
தாலே யுண்டாகுந் தாக்ஷியே

லலிவ-ம்:—நாதா! பாவி மன்மதவாதை தாளக்கூடவில்லையே? தென்றலும் அன்றிலும் என்னைக் கொல்லுகின்றதே. சந்திர வெப்பத்தால் தேகோஷ்ணமாகின்றதே. இன்னமும் வாதா.

அழ. வ-ம்:—அடி அசடே! இதென்ன மொழியாடுகின்ருய். நீ மகா சாமர்த்திய சாலிதான். இதற்குமுன் என்போல் எத்தனை ஆடவரை மயக்கி இப்போ தென்னிடம்வந்து சாகஸம் செய்கின்ருயோ தெரியவில்லை.

லலி. வ-ம்:—அப்படி நினைக்கவேண்டாம்; இது புதுப்பாண்டம்தான். உமக்கென்றே இத்தனை நாள் விரதத்தோடு காத்திருந்தது. விவாகம் செய்து வேடிக்கைப் பார்த்தாலல்லவோ தெரியவரும்.

அழ. வ-ம்:—அடி பேதாய்! என்ன விநோதமாகப் பேசுகின்ருய்.

## லலிதாங்கி பாட்டு

### (இம்மாத்ரம் செய்வாயனுமானே என்ற மெட்டு)

பல்லவி

பெண்ணாசைகூடாதென்றெண்ணாதே பிராணதுரையே
இம்-மண்ணாசைதன்னை வெறுக்காதே (பெண்)

அநுபல்லவி

பொன்னாசையிலா பூவலரே நீ
கண்ணணைசொலுங் காவலனே நற் (பெண்)

சரணம்

பெண்களிலாவிடில் பிறப்பிறப்பேது
பேரின்பமென்கிற பேச்சிதுதீது

பூமிதேவியாகாய வாணியார்
போற்றுங்கங்கை புஸ்தக சரஸ்வதியார்

ஜீவன் சிவமயம் தேகஞ் சத்திமயம்
சேர்ந்திலாவிடில் ஜெபதபமேது
க்ஷத்திரியருக்கு லக்ஷுமிகடாக்ஷம்
உற்றதுபொருத்தம் பெற்றதுதிருத்தம்

கருத்தினில் மதித்துரைத்
திடிற்செகத் துணைப்பெறேன்
தீதான வேதாக மாபூசை யாமீதி
லேதாகு மோராஜ னேகூறும் பூமீது

பெண்ணவள் வயிற்றிருந்து பிறந்திடவில்லையோ
பெற்றவள் கொடுத்தவொரு பால்குடிக்கலையோ
எண்ணிப் பாராமலேனை யேசுதல் மதியோ
எடுத்துச் சங்கரலிங்கம் படித்துப்புகழுந்தங்கம் (பெண்)

லலி. வ-ம்:—நாதா! வீணாக இவ்வித வாது செய்வது தகாது. பேதையாகிய என் பாவம் தங்களை லேசில்விடாது. சொல்லுதற் கடங்காத வளமமைந்த பெரிய தேசத்தை அரசாக்ஷி செய்துவரும் மகாராணியாகிய நான் வலுவில்வந்து இப்படி வருந்தி யழைக்க தாம் பலாத்கரிப்பது தருமமா?

## அழகேசன் பாட்டு

(மாரன்வதையினால் என்ற மெட்டு)

இராகம்-பைரவி, தாளம்-ரூபகம்.

பல்லவி

செல்லாதுன் ஜம்பமே ஜாலஞ்
செய்யாமலே செல்வாய்
தையலே மெய்யாக (செல்)

அநுபல்லவி சந்தத்தொடர்

சிறந்தமதி யிதுவலநட
தெரிந்துமென தொடுமருவிட (செல்)

தேசத்தினி லேபற்பல
காமக்கலை யேகற்றது (செல்)

சிரித்து மரித்து நடித்து
அணைக்க நினைத்த கருத்து (செல்)

தீராத மாபாவ மேலாகு
மேயோடி போபோடி வாயாடி (செல்)

சிவநிலை விலகிட பலவித
மபிநய மிடுநின தொருவகை (செல்)

தேடி எனை மருவிடவிளை
யாடி வருமுன தொரு செயல் (செல்)

சரணம்

கல்லாத மாந்தரைப் போலே மயக்கிறாய்
காமாந்த காரக் கதைகள் படிக்கிறாய்
வல்லாண்மையாக வாய்பேசி நடிக்கிறாய்
மானயீனம் விட்டுத் தானே நகைக்கிறாய்

வணங்கி யிணங்கி வந்து
வருந்தி வருந்தி நின்று
தணிந்து பணிந்திடல் வீணே
சங்கரலிங்க னிடந் தானே (செல்)

அழ. வ-ம்:—சீ! சீ!! சீர்கெடுக்கவந்த ஜெகஜாலியே! இன்னுமா இவ்வித நீதி ப்டிக்கின்றாய்; கடைசியாகத் தெரிவிக்கின்றேன் அவமான மடையாமுன் அகன்றுவிடு.

லலி. வ-ம்:—ஆனால் தாங்கள் என் எண்ணப்படி விவாகம் செய்து கொள்ளாவிடினும் என்னாசைதீர ஒரு

## லலிதாங்கி பாட்டு

(நாச்சோகானு என்ற மெட்டு)

முத்தந்தாராய் மன
மோகனமா மைய லாகினேனே (முத்)

உத்தமராஜ உதாரப் பிரக்யாதா
ஓங்கும் புகழ்பெற்ற மாமலர்ப்பாதா
உல்லாசமாய் வெகு சல்லாபமாய் (முத்)

ஆசைக்கிசைந்த விலாசகெம்பீரா
ஆனந்த மோக சிங்கார வுதாரா
அன்புடனே மனத் தென்புடனே (முத்)

## அழகேசன் விருத்தம்

அச்சமடம் நாணம்பயிர்ப் பென்னும் நான்கை
அறவொழித்து அகங்கார மதைமேற் கொண்டு
கொச்சைமொழி பேசிஎன்முன் குரங்கைப் போல
கொண்டதோர் காமத்தால் குலைக்க லானாய்

பிச்சையுண்டு திரிந்தாலும் பெண்கட் கேற்ற
பெருமைதரும் பூஷணமாங் கற்பே என்னும்
பக்ஷமதை கெடுத் தலைய நீதியாமோ
பாவமிது ஆகாது பாரில் பாதே.

## அழகேசன் பாட்டு

(வேண்டாதே என்ற மெட்டு)

பல்லவி

நில்லாதே பதில் சொல்லாதே
மொழி தள்ளாதே தூரச்செல் (நில்)

அநுபல்லவி

அல்லல்நேருமினி யஞ்சிடாமலுனை
ஆடிவரச்சொன்னது சாரமற்றபேயேயிங்கு (நில்)

சரணம்

வெட்கமற்று மத பித்தமுற்று சிவ
நிஷ்டைபெற்ற எனை தொட்டு நித்தமுமே
கட்டிமெத்தைதனில் முத்தமிட்டிடென
கத்தாதே கத்தாதேஇங்கு காதகி பாதகிபினி (நில்)

வ-ம்:—சீசீ துற்கபடி பெண்ணுயிற்றே என்று எத்தனையோ இத மானவார்த்தை யுரைத்தும் பேய்போலாடிப் பினத்துகின்றாய். (சேவகனிடம்) அடே காவலா! இவளது கரத்தில் விலங்கிட்டு காட்டில் துரத்திவிடுவாய் செல் சீககிரம்,

[சேவகன் லலிதாங்கி கரத்தில் விலங்கிடுகின்றான்]

லலி. வ-ம்:—பிராணபதி! இவ்விதமென்னை அவமானமாக்கினீரல்லவா? ஆயினும் பெரிதல்ல; நீரென்னை விவாகம் செய்துகொள்வதற்காகவே முதலாவது எனது கரத்தில் இக் கங்கணத்தைத் தரித்தீர் இனி மணமாலை சூடவேண்டியதென் கடமை நாதா நானே அரசியாகில் எவ்விதத்திலும் உம்மை விவாகம் செய்து கொண்டகருத்தை நிறைவேற்றுகின்றேன். க்ஷத்திரியனுகில் உமது நிர்ணயத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் பார்க்கலாம்.

அழ. வ-ம்:—நல்லது உன்னிஷ்டப்படி கைகூடுங்காலம் பார்த்துக் கொள்வோம் இனியாவது க்ஷேமமாகப் போய்விடு உன்னை அதிக கடின சிக்ஷை விதிக்கப்படாதென்று இம்மட்டோடு விடுகின்றேன்.

[லலிதாங்கி செல்கின்றாள்]

(சீன் முடிவு)

சீன்—8. இடம்—கானகம்.

நடிகர்:—லலிதாங்கி. ஆண்பெண்பூதம், வேடர், காந்தீபன்.

## லலிதாங்கி பாட்டு—கண்ணிகள்

(என்னையே ஈன்றெடுத்த என்ற மெட்டு)

தன்னந்தனியாகக்காட்டில் தெய்வமே
தயங்கிவாடவிதியோ தெய்வமே (தன்)

கன்னியிதற்கேதுசெய்வேன் தெய்வமே
கலங்கிவாடிடலானேன் தெய்வமே (தன்)

எங்குவழிகண்டுசெல்வேன் தெய்வமே
எவ்விடம்நான்போய்பிழைப்பேன் தெய்வமே (தன்)

லலி. வ-ம்:—ஐயோ! இதுவுமென் தலைவிதியா இக்கொடிய காட்டில் நகர்செல்லும் வழியுந்தென்படவில்லையே; தெய்வமே! தோழிகளுரைத்த சொல்லைத்தடுத்துவந்ததின் பலனுயிது யாரிடம் செல்வேன் யாரைக்கொண்டு என் சபதத்தை முடிப்பேன். ஆ! இதென்ன இரைச்சல்.

[பூதம் உள்ளிருந்து சப்தத்துடன் வெளிவந்து]

## சந்த வசனம்

பூதம். வ-ம்:—ஆ! ஆ!!

கானகத்தி லேதனித்து வாசமுற்று
நானிருப்ப தாலொருத்தர் நேரில்நிற்க
லாகுமா
மானிடப்பு லால்மிகுத்த வீரமுற்ற
தானவர்க்கு மேயதிர்த்த தீரனெட்டு
யானைபோல்
தானெனக்கு மேமிகுத்த தாகவெட்கை
யோடதிர்த்த வாயினித்த வூனெடுக்க
பசியதாய்
ஆனதிப்ப வேதுடித்து கானகத்து
யானைஎட்டு மேபிடித்து தானடித்து
தினுவனே

இக்காட்டிலே வாசம்செய்யும்படியான மகாராஜ ராஜ ஸ்ரீ பூத மகா ராஜனுகிய எனக்கு இன்றைக்கு அதிகமான பசி எடுக்கிறது. எட்டுயானைகளைப் பிடித்துக் கொன்றுதின்றுல்தான் பசியடங்கும். [ஓர் புறமாகநின்று யோசித்து]

வ-ம்:—ஆ! ஆ! இன்றைக்கு மானிடவாசம் வீசுகின்றது நமக்கு நல்ல வுணவுகிடைத்தது இதோ பார் ஓர் அழகிய பெண்ணானவள் வருகின்றாள். [லலிதாங்கி வெளிவந்து]

லலி. வ-ம்:—தெய்வமே! இப்பெரிய பூதமானது என்னைக் கண்டு கொண்டதே இனி என் செய்வேன் நீதான் துணை இந்தப் பூதத்தின் பாதம்பணிந்து தப்பித்துக்கொள்வதே நன்மை.

[பூதத்தினிடம் சென்று]

## லலிதாங்கி பாட்டு

(ஆ சகிகாள் என்ற மெட்டு)

பூதமேகேள் போற்றிசெய்தேன்
காத்துமுகம்பார்த்து எந்தன்குறை தீர்த்தருள்வாய்நல்ல (பூத)

ஆதரவற்றஅனாதி யானேனென்னை
ஆதரித்தால்நலமே அப—வாதம்செய்தால்பவமே
மாதுன் மகளெனப் பாதம் பணிந்திட்டேன்
யாதுங் குறைவின்றிக் காரும் பாரும் நல்ல (பூத)

பூத. வ-ம்:—பெண்ணே எழுந்திரு. பயப்படாதே நீயார். எதற்காக இங்கு வந்தாய்.

லலி. வ-ம்:—நானோர் திக்கில்லாப் பெண். விதிவசத்தால் இங்கு வர நேர்ந்தது. காத்தருளவேண்டும்.

பூத. வ-ம்:—ஆகட்டும் இதென்ன உன் கையில்.

லலி. வ-ம்:—ஓர் துஷ்டன் இவ்விலங்கைப் பூட்டினான்.

பூத. வ-ம்:—நானதை ஒடித்து விடுகின்றேன். உன் கையை நீட்டு.

[பூதம் விலங்கைக் கழட்டிவிட்டு]

பெண்ணே! நானுன்னைக் காப்பாற்றினேனல்லவா. அதுபோல் நீ என்னைக் கலியாணம் செய்துகொண்டு காப்பாற்றவேண்டும். இல்லாவிட்டால் லபக்கென்று விழுங்கிடுவேன்.

லலி. வ-ம்:—அப்படியா? உன்னிஷ்டம்போலாகட்டும். உனக்கின்னும் விவாகமாகவில்லையோ.

பூத. வ-ம்:—ஆ ஆ என் பெண்டாட்டியிருக்கிறாள். ரெம்பவும் அழகாயிருப்பாள். வழவழைக்கின்றேன் பாரு. அடிபெண்ணாக்காயி.

பெண் பூதம் வ-ம்:—ஏண்டா ஏண்டா எம்புருசா.

[பெண்பூதம் வெளியில் வர இரண்டும் நடித்தல், லலிதாங்கி பெண்பூதத்தை அனுப்பிவிடச் சைகை செய்தல்.]

ஆண் பூத. வ-ம்:—பெண்ணே நீ போயி கொகையிலே யிரு. நான் ரெண்டு யானை புடிச்சிவரேன். [பெண்பூதம் உட்செல்ல]

லலி. வ-ம்:—ஆமாம் அவளைப் பார்த்தால் வெகு கோரமாக யிருக்கின்றது. நீ யில்லாத சமயத்தில் அவளென்னைக் கொன்று தின்று விடுவாள்போல் தெரியுது. அதனுல் முதலாவது அவளைக் கொன்றுவிட்டால் நானுன்னைக் கலியாணம் செய்துகொள்வேன்.

ஆண் பூத. வ-ம்:—கண்ணே இதோ அவளைக் கொண்ணுடுறேன். அடி பெண்ணே ராக்காயி.

பெ. பூத. வ-ம்:—ஏண்டா! ஏண்டாஎம்புருசா.

ஆ. பூத. வ-ம்:—ஆமாண்டி! இந்நேரம் எங்கடி போயிருந்த. நானு காத்துகிட்டு இருந்தனே.

பெ. பூத. வ-ம்:—ஏண்டா புருஷா! என்னடா ரொம்ப பேசற.

[இரண்டும் சண்டையிட பெண்பூதம் மடிதல்]

ஆ. பூத. வ ம்:—கண்ணே! அந்த மம்மதன் உலக்கபாணம் போடுருன். கலியாணம் பண்ணிக்கோ.

## ஆண்பூதம் பாட்டு

கல்யாணம் பண்னிக்கோடி பெண்ணே
கைத்தாலி கட்டிக்கோடி கண்ணே (கல்)

நல்ல காட்டாடு சமைச்சுதாரேன்
நாகதாளி பழம் பரித்துதாரேன்
மல்லிகை புஷ்பம் கொண்டுவாரேன்
மருக்கொழுந்து மெத்தை கொண்டுவாரேன் (கல்)

லலி. வ-ம்:—ஆக்ஷேபனை யில்லை. அதோ ஒரு டீலைதெரிகிறது பார். அங்கே என் தங்கை மோகனமணி இருக்கின்ருள் அவளைப் போய் அழைத்து வா. இருவருமாக உன்னைக் கல்யாணம் செய்துகொள்கின்றோம்.

[பூதம் செல்கின்றது. காந்தீபன் வேட்டையாடி வருதல்]

## காந்தீபன் பாட்டு

(போகசுகம் நீதருவாய் என்ற மெட்டு)

பல்லவி

வேட்டையாடுவோம் வாரீர் வாரீர்வன
வேட்டையாடுவோம் வாரீர் (வே)

அநுபல்லவி

வேட்டையாடுவோம் வாரீர் தாட்டீகமாய் வனத்தில்
காட்டுமிருகங்களை கட்டிபிடித்து அடித்துமடிந்திட (வே)

சரணம்

வில்லைவளைத்ததி வேகமாயோடி
வேங்கைப்புலிகள் மேலேவிளையாடி
சொல்லுந்துஷ்ட மிருகங்களைஜாடி
துரிதமுடனேகன்னி வலையதனைவிசிரி (வே)

காந். வ-ம்:—வேடர்காள்! நானுபக்கமும் சென்று புதர்களிலிருக்கும் மிருகங்களைக் கலைத்து வெளியே துரத்துங்கள். நான் அதோ அம்மலையடி வாரத்தில் சென்றிருக்கின்றேன்.

[காந்தீபன் மறைகின்றான். லலி தாங்கி வெளிவந்து]

லலி. வ-ம்:—பாழும் பூதம் நமது வார்த்தையை நம்பி சென்றுவிட்டது. இனி நாம் விரைந்து சென்றுவிடுவோம்.

[போக பூதம் எதிர்வந்து]

பூத. வ-ம்:—பெண்ணே! அங்கே யாருமில்லை. என்னை வச்சுட்டு பூடலாம்ணு பார்த்தியா? வாடி இப்டி.

## பூதம் லலிதாங்கி தர்க்கம்

### (தோட்டால் மணக்குதடி என்ற மெட்டு)

பூத. செக்கசிவந்தகுட்டி வாடிவாடி
லலி. திருட்டுப்பயலேசும்மா போடா போடா
பூத. வெட்கமில்லாமல் செய்வோம் மோடி மோடி
லலி. விட்டுநடப்பாயடா வோடி வோடி
பூத. தக்கநேரமிதடி
லலி. சாபமிடுவேனடா
பூத. முத்தங் கொடுப்பாயடி
லலி. முறட்டுபயலே போடா
பூத. பக்குவமாயிங்குபடுத்து சுகிப்போமடி (செக்)
லலி. துஷ்டாநாசமடைவாய் பாரு பாரு
பூத. சோக்காய் ஒருதில்லாலேநீ பாடு பாடு
லலி. இஷ்டங்கொள்ளாதே மனம் தேறு தேறு
பூத. எல்லாமறிவேனென்னைக் கூடு கூடு

லலி. துள்ளிவிழுகாதடா

பூத. தொண்டுசெய்குவேனடி

லலி. பல்லையுடைப்பேனடா

பூத. பாதம்பணிவேனடி

லலி. கள்ளப்பயலேவுந்தன் கருத்துக்கிசையேனடா. (செக்)

பூத. வ-ம்:—ஏண்டி! உன்னை நம்பி என் பொண்டாட்டியைக் கொண்ணுட்டேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேண்ணு சொல்லிவிட்டு என்னு தமாஸ்பண்றே.

லலி. வ-ம்:—அடாபாவி! உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள என் மனம் இசையாது. அதைவிட என்னைக் கொன்று தின்றுவிடு.

பூத. வ-ம்:—சே! சே!! தின்றதுண்ணு அப்பவே சாப்டு எப்பம் உட்டிருப்பனே. அது கூடாது. நீ நல்ல அயகாகிரே; நானு உனக்கேத்த மம்முதன்தான். வா ரெண்டுபேருங் கொகைக்குப் போலாம்.

## பூதம், லலிதாங்கி தர்க்கம்

(பாராமுகமேனையா என்ற மெட்டு)

பூத. கொண்டைப்பூ மாலைக்காரி
கூடிடவாடி என்னைக் கூடிடவாடி
கண்டவுடனே மனங் கருங்குதே லேடி

லலி. வண்டப்பயலே யிந்த
வாதுசெய்யாதே இந்த வாது செய்யாதே
சண்டனுலகடைய சாபங்கொள்ளாதே

பூத. தொண்டுசெய்கு வேனடி
சோலைக்குள்வாடி இந்த சோலைக்குள்வாடி
மண்டையுள்ளமட்டும் நான் மறவேனுன் மோடி

லலி. தண்டமிழ்ச் சங்கமகிழ் சங்கரலிங்கம்
சென்னை சங்கரலிங்கம்
சந்தமுறை தள்ளாதே சாருமே பங்கம்

லலி. வ-ம்:—வேண்டாம் என் சாபம் உன்னை லேசில்விடாது. இருப்பிடத்தைநாடிச் சென்றுவிடு.

பூத. வ-ம்:—அப்படியா? நீ என் கையிலிருந்து தப்பிவிடலாமென்று நினைத்தாயோ. இப்போதே உன்னைத் தூக்கிக்கொண்டு போகிறேன் பார்.

லலி. வ-ம்:—ஐயோ தெய்வமே! இந்தப் பூதத்தின்வாயில் என்னை யகப்படவிட்டனையே. காப்பாற்றுவாரில்லையே.

[காந்தீபன் வெளிவந்து]

காந்தீபன். வ-ம்:—ஆ! ஆ! ஓர் பூதமானது ஓர் பெண்பிள்ளையைப் பலாத்கரிக்கின்றது. பூதத்தைக் கொன்று அப்பெண்ணைக் காப்பாற்றுவது நமது கடமை. (பூதத்தருகிற் சென்று) அடே நீ யார்? இந்தப் பெண் யார்.

லலி. வ-ம்:—அண்ணு! நமஸ்காரம்; காப்பாற்றவேண்டும்.

காந்தீ. வ-ம்:—ஆசிர்வாதம்; பயப்படாதே.

பூத. வ-ம்:—யாரடா நீ? நானிந்தக் காட்டுக்கு அரசன் பூதராஜன். இவள் என் பெண்டாட்டி.

காந்தீ. வ-ம்:—சீ அற்பனே! நீயோ ராக்ஷஸாம்ஸம்; இவளோ மானிடாம்ஸம் இவளுன் மனைவியாவது. மடையா! உயிர் தப்பி ஓடிப் போ; இல்லையாளுல் உன் கதி எமன் பதிதான்.

பூத. வ-ம்:—சீ சீ கொசுப்பயலே! நரப்பயலே! அதிகமாய்ப் பேசாதே கசக்கி நசுக்கி புசித்துவிடுவேன் ஜாக்கிரதை.

காந்தீ. வ-ம்:—அடே அறிவற்றவனே! இதோ இந்த பாணத்துக்குத் தப்பித்துக்கொள் பார்ப்போம்.

[இருவரும் யுத்தம் செய்ய பூதம் மடிகின்றது]

காந்தீ. வ-ம்:—பெண்ணே! நீ என் இராச்சியத்துக்கு வா; உன்னை யாதொரு குறைவின்றிக் காப்பாற்றுகின்றேன்.

[இருவரும் போதல்] (சீன் முடிவு)

## சீன்—8. இடம்-மாளிகை.

நடிகர்:—காந்தீபன், லலிதாங்கி, திருடர்கள்.

[லலிதாங்கி ஆசனத்தி லிருக்க காந்தீபன் அவளறியாது ஓர் புறம் நின்று மோகித்தல்]

காந்தீபன் வ-ம்:—வனத்தில் வேட்டைக்குச் சென்ற சமயத்தில் கண்டழைத்து வந்த இம்மங்கைமேல் அன்றே எனது மனங்காமுற்றது. ஆ ஹா இவளின் வடிவழகைக் காணக் கண்கள் பதிஞயிரம் வேண்டும். வனதேவதையோ தேவ ஸ்திரியோ. மானிட மங்கையோ யாராயிருக்கலாம்.

### காந்தீபன் பாட்டு

(மதனசுந்தரமாது என்ற மெட்டு)

இராகம்-பூரிகல்யாணி, தாளம்-ரூபகம்.

பல்லவி

புதுமைசித்ரவிலாசி மந்தகாசி (புது)

பூமகளோ நாமகளோ
மாமகளோ பூவையிவள் (புது)

அநுபல்லவி சந்தத்தொடர்

போ கமத சயனரமனி
யா குமிவள் விரகநயனி (புது)
போதும் போதும் எனமொழி
யாதும் போகந் தருமிவள் (புது)
புஷ்பம லர்ச்சய னத்தில ணைத்தும
கிழ்ச்சிகொ டுத்திடு (புது)
பொற்ப தத்தை யிப்பு விக்குள்
வைத்தெ ணைத்தி கைக்க விட்ட (புது)
பொதிகையிலுறை முனிதொழு மிவள்
மதிமுகவதி மிகுவதிசய (புது)

சரணம்

பூமிபுகழ் முத்து சாமிதமிழ் வஸ்து
பொங்கம லங்கிர்த சங்கர
லிங்கனு ளங்கமழ் சுந்தர (புது)

காங். வ-ம்:—இவள் புதுமையாகவே இவ்வுலகத் துதித்தப் பூங்கொடியென்பதிற் றடையில்லை. அப்சரஸ்திரிகள் நால்வரும் ஒருங்கு சேர்ந்து இவ்வுருவத்துடன் வந்தனரோ. அன்றி காந்தர்வ லோகவாசியோ. இந்திர லோகஸ்திரி ரத்தினமோ. அடடா என்ன வுருவம். உருவத்துக்கேற்ற பருவம். சபாஷ்! கண்டோர் மயங்குங் காக்ஷிக்கேற்ற வனசாக்ஷி யிவளே.

## காந்தீபன் பாட்டு

(சரி சரி என்ற மெட்டு)

பல்லவி

காக்ஷியே கண்டேன்
கண்ணாரப் பெண்ணின் (கா)

அநுபல்வி

கலைமாமதி முகமேரதி
சிலைமாவதி சயமோகன (காக்ஷி)

சரணம்

கருத்துக்கிசைந்த பொருத்தமமைந்த
கண்மணியிவள் ரூபமே
காணக்காணத் தோணுமந்த
காமனார் சல்லாபமே

காந்த சித்திரம்
மாந்தர் பத்திரம்
கனிவாய்மொழி எனுமோர்கிளி
இவளேமணி தனமார்புளக் (காகூஷி)

சகலமதன கலவிக்கினிய
சரஸசயன லேடியே
தழுவியணையும் புதினமொழிகள்
சாற்றுங்காமக் கிரீடியே
தங்கமே யங்கம் புகழ்
சங்கர லிங்கம்
சந்தங்கமழ் கந்தந்திகழ்
சொந்தம்பெறு மெந்தன்மனக் (காகூஷி)

வ-ம்:—சரியான பிராயம்; திரண்டஸ்தனம்; படர்ந்தபுஜம்; கனிந்த யிதழ்; தணிந்த பார்வை; சுருண்டகுழல்; ஒடிந்த இடை; அடர்ந்த துடை; சாமுத்திரிகாலக்ஷண முழுதுஞ் சரிவரப்பெற்ற சற்குணவதியை நானடையப்பெற்ற பாக்கியமே பாக்யம். நல்லது அவளருகில் சென்று கருத்தையுரைத்து காதலைத் தணியலாம்.

[லலிதாங்கியிட மணுகி]

காந். வ-ம்:—கண்மணி! இப்படிவா; சோகமுற்றிருக்குங் காரணமென்ன?

லலி. வ-ம்:—அண்ணா நமஸ்காரம்; என் காலபலத்தைக் கருதி யோசிக்கலானேன்.

காந். வ-ம்:—காதலி! இன்னொருமுறை என்னை அண்ணாவென் றழையாதே மன்னாவெனச் சொல்.

லலி. வ-ம்:—அண்ணா வென்பதற்கும் மன்னா வென்பதற்கும் வித்தியாச முளதே.

காந். வ-ம்:—அண்ணாவென்றால் வித்தியாசம்தான் நானுனக்கெப்படி யண்ணன் உடன் பிறந்தவனா அன்றி தாயாதிவர்க்கமா? அல்லது அனந்தர ஜேஷ்டனா அல்லவே என்னை எப்படி அண்ணாவென் றழைக்கலாம்; காதலி! நான் சொல்வதைக்கேள். அன்றுன்னைக் கானகத்தில் கண்டது முதலாக,

## காந்தீபன் பாட்டு

(அமலவிமலகமல என்ற மெட்டு)

மதனவிரக மதனிலுருகி
மருவநினது மனமுனணுகி
மானே நானே வாடுறனே (மதன)

| | | | |
|---|---|---|---|
| மயிலுமினிய | | குயிலுமுனது | |
| வசனவமுதி | | லிளகியலையு | |
| மதன்விடுசர | | மழைஎனதொரு | |
| மயல்பெருகிட | | மதிதவறிட | |
| மானே | நானே | வாடுறனே | (மதன) |
| தழுவியணைய | | சமயமிதுவே | |
| சரஸவிரக | | சயனரதியே | |
| தாளேன் | தாளேன் | சாகஸமே | (தழுவி) |
| சரபகவியி | | னினியகமல | |
| சரணமனதில் | | துதிசெய்சுகுண | |
| சங்கரலிங்கன் | | தந்திடுந்தமிழ் | |
| சந்தனம்புனை | | சுந்தரவதி | |
| தாளேன் | தாளேன் | சாகஸமே | (மதன) |

வ-ம்:—காதலி! இந்தப் பூமண்டல முழுமையும் உனக்குச் சொந்தமாகச் செய்கிறேன். பல்லாயிரங்கோடி பணிவிடையாளரை விட்டு யேவல் செய்யச் செய்கிறேன்; என் இஷ்டத்திற் கிணங்கினுற் போதும்.

லலி. வ-ம்:—அண்ணு! நானே திக்கில்லாப் பேதை; அநியாயமாக பூதத்திற் கிரையாகும் வேளையில் என்னைக் காப்பாற்றி இங்கு கொண்டுவந்து இவ்வித பலாத்காரம் செய்வது நல்லதல்ல; மேலும் உத்தம க்ஷத்திரிய குலத்துதித்த தம்போன்ற,

## லலிதாங்கி பாட்டு

(ஏண்டாவுனக்கிந்தமதி என்ற மெட்டு)

பல்லவி

| | | |
|---|---|---|
| மன்னற்கிது | நீதியல்ல | |
| மையலெந்தன் | மீதில்கொள்ள | (மன்) |

அநுபல்லவி

| | | |
|---|---|---|
| அன்னீத | மாகுமேயிது | |
| ஆடவருக் | கேதகாது | (மன்) |

சரணம்

| | |
|---|---|
| அன்னியமாதராசை | யாலேவரும்பிசாசை |
| முன்னிலணுகவொட்டாது | முற்றுமேவிலக்கிடாது(மன்) |
| காமமென்கின்றபேயால் | கட்டழிந்துவீண்நோயால் |
| க்ஷாமமடைவதுநல்ல | தர்மமோ இன்னும்நான்சொல்ல(மன்) |
| சங்கீதசாரமுத்து | சாமிசெந்தமிழ்கற்று |
| சங்கரலிங்கன்சுகந்த | சந்தமுறைதானுணர்ந்த(மன்) |

வ-ம்:—மன்னவர்களுக்கிவ்வித துற்செயல் கூடாது தங்களிஷ்டத் திற்கென்மன மிசையாது தயவுசெய்து சென்றுவிடும் அண்ணா!

காங். வ-ம்:—இந்த நீதிசாஸ்திர வார்த்தைகள் உனக்கே தெரியு மென்றெண்ணாதே என் ஜீவன் உன்கையிலிருக்கிறது.

### தர்க்கம்

(சம்மனசுங்கள்பதங்கள் என்ற மெட்டு)

காங். மையல்கொண்டு உந்தனாலேநொய்யுறேனடி

லலி. வார்த்தைதாறுமாறு பேசலாமோயிப்படி

காங். வாலிபகாலம்வீண் போகலாகுமா

லலி. மாதராசையால் பழிவிடாமலேகுமா

காங். வந்தாளுவா யென்னை

லலி. மானிலமீதாகுமோ இவ்வாதுசெய்யவே

காங். வாடிநீஜோடிதான் கூடியாடவே

லலி. மானயீனமேயிலாதமடையனே தூர விலகடா

லலி. வ-ம்:—உமக்கென்ன மானயீன மென்பதில்லையா? உம்முடன் பிறந்தால்தானா தங்கை யாராயிருக்கினும் அண்ணாவென்றழைத் தால் அவர்களைத் தங்கையாக பாவிக்கவேண்டாமா?

காங். வ-ம்:—காதற்கனியே! காமக்கரும்பே! உன் வார்த்தையைக் கேட்கும்தோறும் மனமயங்கி மதிமாறுகின்றதே ஹேவனி தாமணி வஞ்சியர் திலகமே! பாவி மன்மதன் கணைகளென்னைத் தாவி வருகின்றதே;

### பாட்டு

(அச்சாமோரி என்ற மெட்டு)

காமசரத்தாலே செங்காதலாகிவாடினேன்
வாடினேன் உன்னை நாடினேன் (காம)

மாமயிலாளே மருவநன்னுளே
மடமானே மலர்தேனே அடமேனே தான் (காம)

சம்போகந்தாராய் சற்றென்னைசேராய்
சரஸாங்கி விரகாங்கி உயிர்பாங்கியே (காம)

வ-ம்:—எனைவாதிக்காதே மோகரஞ்சிதமே! மோடி செய்யாதே கோடிநமஸ்காரம்; ஒருமுறை கூடினால்போதும்.

## லலிதாங்கி பாட்டு

(தாய்நானல்லவே என்ற மெட்டு)

ஞாயமல்லவே அநி
யாயம் சொல்லவே (ஞாய)

பேயனைப்போல் பேசுகின்றாய்
பேதைஎன்னை யேசுகின்றாய்
மாயமீது ஆகாதையா
மையல்கொள்வ தேனோ மெய்யா (ஞாய)

காதல்கொண்டால் தீது நேருங்
கன்னிஎந்தன் பாவம் சேரும்
ஆதலாலீ தாகாதையா
ஐயோகாமம் பொல்லாது மெய்யா (ஞாய)

லலி. வ-ம்:—ஐயா பாழான காமத்திற் குடன்பட்டு ஏழான நரகத்தில் வீழாவண்ணம் மதியை மாறவிடாது நீதியுடன் வாழ்குவீர் நானின்னும் விவாகமாகாதவள். தவிரவும், வெகு நாளாக மனதிற் கோரிய ஓர் மகா புருஷனை மணமுடிக்கவேண்டி இக்கெதியடையலானேன். ஆகையால் நீர்கொண்ட எண்ணத்திற் கிசையேன். சென்று விடும்.

## காந்தீபன் விருத்தம்

தாகவிடாயானாலுந் தணிவதற்குக்
காபீட தண்ணீருண்டு
சோகவிடாயானாலும் தணிவதற்கு
பெரியோர்கள் சொல்வாக்குண்டு
தேகவிடாயானாலும் தணிவதற்கு
மருந்துண்டு சிறந்தபோக
மோகவிடாயானலே தணிவதற்கு
மருந்துண்டோ மொழிவாய்பெண்ணே.

காந். வ-ம்:—காதலி உனது மோகவிடா யதிகரித்து மதுவுண்ட வண்டென மயங்கியலையும் என்மேலுனக்கு பக்ஷமில்லையா. கருணையில்லையா தயவில்லையா. பூதத்தினா லிறக்கப்போகும் உனக்கு உயிர் பிச்சை கொடுத்த நன்றியையாவது எண்ணி என் எண்ணத்தை ஈடேற்றக் கூடாதா.

## லலிதாங்கி விருத்தம்

எட்டாதகொம்பி லிருக்கின்ற தேனுக்கு எட்டிஎட்டி
கிட்டாததென்று தெரிந்துபின்காமக் கிருக்குகொண்டு
கொட்டாவியிட்டுப்பின் கோடானுகோடி கும்பிடிட்டு
முட்டாளைப்போலப் பினத்துவதேனடா மூதேவியே.

லலி. வ-ம்:—இனி உன்னை மதித்துப்பேச என்மனமிசைசாது. துஷ்டனே உனக்கென்ன புத்தியில்லையா? நீயொரு க்ஷத்திரியனெனக் கரத்தில் செங்கோலைத் தாங்கி சிம்மாசனத் தமர்கின்றனையே? மடையா! எட்டிநில்.

## காந்தீபன் லலிதாங்கி தர்க்கம்

(சஞ்சலமாய் நெஞ்சமிக என்ற மெட்டு)

காந். கட்டிமுத்தமிட்டணைத்து மயில்போலே சித்ரக்
கட்டிலில்வீற்றிருக்கலாம் குயிலாளே (கட்)

லலி. கெட்டபுத்தியாலே கெட்டுப் போகாதே வீணாய்
மட்டித்தனமானவார்த்தை யாடாதே (கெட்)

காந். வட்டமிட்டகுத்து குயமெக் களிக்குதே அதை
தொட்டுமுத்தமிட மனந் தத் தளிக்குதே (கட்)

லலி. மட்டுமரியாதைவிட்டு அலையாதே என்னைத்
தொட்டிழுத்துக் கஷ்டமுற்றுக் குலையாதே (கெட்)

காந். பாவிமதபாணம் புலிபோல பாயுதே இளம்
பாவையேயென் தேகமணலாகக் காயுதே (கட்)

லலி. பாவியிந்தவாது உனக் காகாதே வீணாய்க்
கூவிமதனாலேமனம் நோகாதே (கெட்)

காந். வ-ம்:—காமராஜமணிக்ரீடமே! சம்போகரத்தினமே வேண்டாம். இனி வீண்வாது செய்யாதே. இதைவிட்டு நீ தப்பித்துக் கொள்ள முடியாது. என்னை வெறுத்தால் கஷ்டத்துக் காளாவாய்.

லலி. வ-ம்:—ஐயா! தங்களைப் பார்த்தால், தரும நெறியும், சற்குணமுறவும், தயாளசிந்தையும், தெய்வபக்தியும், சான்றோர் வாக்கியமும் தெரிந்த சாதுவைப்போல் காண்கின்றது. அன்றியும், வெற்றிமிகுந்த நற்றவமுற்ற க்ஷத்திரியக் குலத்துதித்து, வீரக்கழலணிந்து விஜய மகுடம் புனைந்து செங்கோலைத் தாங்கும் பிரபுவா யிருக்கின்றீர்.

இருந்தும், க்ஷத்திரிய தருமத்தை மீறி நடப்பது தகுமா? நெடிய கடல் சூழ்ந்த இப்பெரிய பூமிக்கு நிலமடந்தை ஆதாரம்; நிலத்தில் வசிக்கும் ஏனைய பிரஜைகளுக்கு உம்போன்ற மன்னவர்கள் ஆதாரம். உமக்கும், குடிஜனங்களுக்கும், பிராமணர்கள் ஆதாரம். பிராமணர்களுக்கு வேதமே ஆதாரம். வேதங்களுக்கும் எண்பத்துநான்கு லக்ஷம் ஜீவகோடிகளுக்கும் தெய்வமே ஆதாரம். இப்படி ஒருவருக் கொருவர் ஐக்கியமா யிருப்பதை நினையாது, தருமமென்பதைக் கவனியாது மன்னவர்க்குக் குடிகள்

மைந்தர்களாகும் என்பதை எண்ணுது; அற்ப ஆசைக் குடன் பட்டு ஓர் அன்னிய ஸ்திரீயின் கற்பைக் கெடுக்க முன்வரலாமா தருமமாகிய செங்கோலைக் கையில் தாங்கும் அரசருக்கிது அடுக்குமா?

ஐயா! விளையும் பயிருக்கு வேலியே காவல். காவலாகிய வேலி பயிரை மேய்ந்தால், பயிர் விளைவாகிய தன் கற்பை மேயவிடுமல்லவா? ஆண் பெண் இரு வகுப்பில் சிறந்தோர் ஆடவர்தானே? ஆடவர் கேடான வழியில் பிரவேசித்தால், பேதமைப் பெண்கள் மதி மாறி நடக்க மனமிசைவார்களன்றோ? நீர் எப்படி என்னைக் கண்டு காதல்கொண்டு கற்பைக் கெடுக்க வந்தீரோ? இதுபோல் உமது மனைவி; அல்லது மகள்; அல்லது தமக்கை இவர்களும் மற்றொரு புருஷனைக் கண்டு மையல்கொண்டு தமது விலையிலா ரத்தினமாகிய பதிவிரதா தருமத்தை இழந்து விடுவார்களல்லவா? இது உமக்கு சம்மதமா? உமது மனைவி வேறு புருஷனை இச்சிப்பது உமக்கு சம்மதமாகில், நான் உம்மை இச்சிக்கத் தடையில்லை.

ஐயா! இன்னுமென்ன சொல்லவேண்டும். யோசிக்கில்; நாயும் பேயும் விரும்பாத நரகயோனிக்கு ஆசைகொண்டீரே! நீரென்ன நாயா அல்லது பேயா? இல்லை இல்லை அருமையாகப் பிறந்த மானுட புருஷன்தானே? உமக்கு பகுத்தறிவென்பது இல்லைபோலும். புண்களாகிப் புரந்தரன் மெய்யெலாம் கண்களானது காமத் தினாலன்றோ? இந்த காமத்திற் குடன்பட்டுக் கத்தபம்போல் அலைவதைப் பார்க்கிலும் ஓர் கன்னிகை வேடந்தரித்து வஞ்சியரை வஞ்சித்து; உன்னிய எண்ணத்தை நிறைவேற்றலாமே? அற்பமாகிய இன்பத்தைக்கொண்டு விற்பனமற்று, நரகில் விழுவதைப் பார்க்கிலும், ராஜகோலத்தை மாற்றி காவிகாஷாயந் தரித்து பரதேசி யாய்விடலாமே? சொற்ப சுகத்துக் காசைப் பட்டு அன்னிய ஸ்திரீகளின் கற்பைக் கெடுக்க எண்ணுவதை விட அக்கினியில் விழுந்து சாம்பலாய்விடலாமே.

ஐயா! நீரென்ன ஆண்பிள்ளை யல்லவா? ஆகம நூல்களை ஆய்ந்தவரல்லவா? விவேகமற்ற மூடாத்மா வல்லவே? படித்தறியாப் பாவியல்லவே? புத்தியில்லா உலுத்தனல்லவே? இருந்தும் மையலால் வாடி மன்னவர் மடிந்தார் கோடி என்பதறியாமல் தையல் பேல் ஆசைகொள்ளத் தகுமா? வையகத்தில் நீர் கற்றது இந்த விதமா? ஐயோ! முற்காலத்திய நற்குல மகளீரான ஜானகி, துரோபதி, தமயந்தி முதலிய ஏனைய பதிவிரதா ரத்தினங்களின் கற்பால் கீசகன், ராவணன் முதலிய அநேக முடிமன்னர் கெடுதியடைந்த கதையைக் கண்டதில்லையா? கண்டவர் சொல லக் கேட்டதில்லையா? வேண்டாம் காமமே குலத்தினையும்,

நலத்தினையுங் கெடுக்கவந்த களங்கம் என்பதை எண்ணிக் கொண்ட எண்ணத்தை விடுத்து தண்டமிழ்ச் சங்கீத சாகித்ய சங்கரலிங்க சந்தவாசகம் படித்து சன்மார்க்கத்தை யடுத்து சந்தோஷமுற் றிருப்பீராகவும்.

## காந்தீபன் பாட்டு

(பனைகைசி என்ற மெட்டு)

தாளேன்மோகம் சரஸபோகம்
தையலேசெய்ய சையோகம் மதன்கணை
ஜாடுதுவேகம் விரக வாதான துதேகம் (தாளே)

(தொகையரு)

மீளாமதனமையல் மீறியுன்னைக்கோறுதடி
மெத்தமதப்பித்தமது நத்திஎன்னைச்சீறுதடி (தாளே)

பாவிமதபாணம் புலிபோல என்மேல்பாயுதடி
பாவையே என்தேகமணலாக மிகக்காயுதடி (தாளே)

காந். வ-ம்:—இனி காலதாமதம் செய்தால் என்னுவி நில்லாது. ஒரு முத்தம் கொடுத்து இன்பசுகந் தந்தென்னை ஈடேற்றுவாய்.

## லலிதாங்கி பாட்டு

(நாச்சோகாளு என்ற மெட்டில் பின் மகுடம்)

பல்லவி

போடா தூரப்போடா புத்தி
போதிக்கின்று யின்னுஞ் சாதிக்கின்றாய் தூரப் (போ)

அநுபல்லவி கண்ணிகள்

ஆடாதபம்பரம் போலே நடிக்கின்றாய்
ஆத்திரத்தால் வெகு வார்த்தை படிக்கின்றாய்
கேடான மோகத்தால் கீழ்மேல் துடிக்கின்றாய்
கேலிக்கிட மேலிட்டிடு
மேயித்ததி நீதிப்பெற (போ)

தங்கைதமக்கை யிலாதவனே சொந்த
தாரத்தைப்போ லென்முன் ஜோராய் பேசவந்தாய்
சங்கர லிங்கன் றன் தாசர்க்கிதுநன்று
தாவி எனைமேவிவரி லாவிபோகும்
பாவி தூரப் (போ)

லலி. வ-ம்:—மதியற்றவனே! விலகிவிடு. மறுத்துரைத்தால் அதிக மாய் மரியாதை கெடும்; சென்றுவிடு துஷ்டா.

காங். வ-ம்:—என்ன சொன்ளுய் சண்டாளி! பாதகி! உன்னை நான் வெகுவாய் வேண்டிநிற்க என்னை மதியாது அவதூருகப் பேசினு யல்லவா; உன் எவ்வனமழிந்து விருத்தாப்பிய ஸ்திரீயாகச் சபித்தேன். போ துஷ்டையே.

[லலிதாங்கி கிழக்கோலமாகின்ருள். எல்லோ ரும் உள் `சல்கின்றனர். திருடர்கள் பிராப்தம்]

## திருடர்கள் பாட்டு

(தந்தானமடி என்ற மெட்டு)

தனதந்தத்தன தனதந்தத்தன தனதந்தத்தனணு
தனதன தனதந்தத்தனணு தனதன தனதந்தத்தனணு
தனதந்தத்தன தனதந்தத்தன தனதந்தத்தனணு
தனதன தனதந்தத்தனணு

மணியடிக்குது மணியடிக்குது மதுரைபேட்டையிலே
நல்ல மதுரைப்பேட்டையிலே ,ல்ல மதுரைபேட்டையிலே
முத்து-மாரியம்மன் கொடிபறக்குது அருப்புக்கோட்டையிலே
நல்லூ-ரருப்புக் கோட்டையிலே (மணி)

ம. து. ரை. மதுரைக் கள்ளனடா அப்பாடா
மதுரைக் கள்ளனடா அப்பாடா
மதுரைக் கள்ளனடா

மதிப்பு மதிப்பு பெத்தவண்டா ஜோக்கா
மதிப்பு பெத்தவண்டா

பதுங்கிஒதுங்கி தேட்டைபோடும் பக்கா கள்ளனடா
என்பேரு-பக்கா கள்ளனடா என்பேரு-பக்கா கள்ளனடா
பல்டிஉல்டி யடித்துப்பாடும் பயில்வான் கள்ளனடா
என்பேரு பயில்வான் கள்ளனடா

1-திரு. வ-ம்:—டே தம்பி காத்தான்! என்ளுடா இன்னிக்கி நம்ப வந்தவேளை கொஞ்சம் நல்லவேளன்னு நெனக்கிறேன். பாத் தியா கையிலே பாளு தடியோ ீடதான் பொறப்டேன். இதுேவா ராஜாவூடு என்ளு சொல்ற உள்ள பூர்லாமா.

2-திரு. வ-ம்:—அண்த்தே! நான் சொல்ரத்தை கேளு. கணக்கிலே போயி அபுக்லேவந்து தபுக்லே குதிச்சி பேசாதே. ஜாமவேளை, பாராக்காரல்லாம் தூங்ரான் ஒரு ஜோக் போய் பாக்கலாம்.

3-திரு. வ-ம்:—டே அண்த்திங்களே! நம்ப சாமியை கீமியை கொஞ் சம் வேண்டிக்னு போளுதாண்டா பலிக்கும்.

## திருடர்கள் பாட்டு

(மாணமதுரையிலே என்ற மெட்டு)

ஐயா முருகையனே ஆறுமுக மானவனே
மெய்யா யுனைப்பணிந்தோம் வேலைவரந் தருவாய்(ஐயா)

ஆச்சி மீனாக்ஷியம்மா ஆதிபரா சத்தியம்மா
காக்ஷிதருவா யம்மா கருப்பாயி மாரியம்மா(ஐயா)

வாடா மதுரைவீரா வடக்குவாசல் காவற்காரா
தாடாவர மெனக்கு தருணம் கிருபாகரா(ஐயா)

[பாடி யாடுதல். இந்த சீனில் வேடதாரிகள் மனோதர்மமாக வார்த்தையாடி, இசைந்த பாடல்களைப் பாடிக்கொள்வதே உசித மென விவரித்தெழுதாது விடுத்தனம்]

[ஒரு கள்ளன் மாடிக்குள் சென்று கிழவியா யிருக்கும் லலிதாங்கியை அழைத்துக் கொண்டு வருகிறான். எல்லோரும் உட் செல்லுகின்றனர்] (சீன் முடிவு)

**சீன்-9. இடம்-கானகம்.**

நடிகர்:—திருடர்கள், லலிதாங்கி.

[இந்த சீனில் திருடர்கள் பொங்க லிட்டு பூசை செய்யும் சமயம் லலி தாங்கி சுயரூபமெடுத்து ஆவேசம் வந்ததுபோல் அபிநயித்து திரு டர்களை பயங்காட்ட திருடர்கள் கீழ்க்கண்ட பாடலைப் பாடிவிட்டு ஸ்தோத்திரம் செய்து வரம்பெற் றேகுதல்; இங்கு மனோதர்மமாகப் பேசுவதே பொருத்தமென எழு தாது விடுத்தனம்]

## திருடர்கள் பாட்டு

அப்பாடாஇவள்காளியடா ஆயிரம்பேய்களை திம்பாளடா
அண்ணன் தம்பிஎன்று பாராளடா
அவள்கையில்வாளடா கொல்வாளடா

(சீன் முடிவு)

சீன்—10. இடம்-காங்கேயமுனிவ ராசீர்மம்.

நடிகர்:—காங்கேயமுனி, லலிதாங்கி.

### காங்கேயர் பாட்டு

(இந்த வுடலைநம்பி என்ற மெட்டு)

பாலாபிஷேகப் பழனிமலை பந்த
பாசப்பிணிதன்னை தீர்க்குமலை
வேலாயுதன் தங்கி வாழுமலை ஞான
வேதம்படர்ந்து விளங்குமலை (பாலா)

காவடியேந்தி கொண்டாடுமலை திருக்
கார்த்திகைபாலனுக் கேற்றமலை
சாவடி தர்மங் தழைந்தமலை தாசன்
சங்கரலிங்கன் சங்கிதமலை (பாலா)

[காங்கேயர் தபசில் வீற்றிருக்க லலிதாங்கி வெளிவந்து]

லலி. வ-ம்:—அதர்மத்துக் குடன்பட்ட அரசனுவிட்ட சாபத்தை பெற்றுத் திருடர்களால் அரண்மனையிலிருந்து வெளிவந்து பின் அவர்களை பயமுறுத்தித் துரத்திவிட்டு இந்தக் கானகம் வந்து விட்டேன். இவ்விடத்தில் மகான்கள் வாசம்போல் தெரிகிறது; அதோ! ஓர் தவசி வீற்றிருக்கின்றார்; அவரிடம் சென்று நமது குறையைத் தெரிவித்துக்கொள்வோம்.

### லலிதாங்கி பாட்டு

(வந்தணைவாய்சாமி என்ற மெட்டு)

பல்லவி

மாதவமாமுனியே நமஸ்தே
மகாசுகுணகுண மகாசுகுணமார் (மாத)

அநுபல்லவி

வேதச்ருபாநிதியே நமஸ்தே
மகாசுகுணகுண மகாசுகுணமார் (மாத)

சரணம்

சாதுசங்கமரே சபலம்தீர்ப்பீரே
வேதவிற்பனரே வினைதவிர்ப்பீரே
பாதகம்தீர்ப்பவரே நமஸ்தே
மகாசுகுணகுண மகாசுகுணமார் (மாத)

லலி. வ-ம்:—சுவாமி! நமஸ்காரம்.

காங். வ-ம்:—கல்யாண்! மங்களமுண்டாகுக. (யோசித்து) அம்மா! சித்திரக்ஷேத்திரபுரத்தரசி யன்றோநீ

லலி. வ-ம்:—ஆம்; சுவாமி

காங். வ-ம்:—நல்லது உன் கருத்தையும் அதனால் உனக்குண்டான துன்பங்களையுந் தெரிந்துகொண்டேன். ஆயினும், எதற்கும் பகவானனுக்ரகம் உண்டு நீ என் ஆசீர்மத்துக்குவா; அந்த அழகேசன் உன்னை மணம் செய்யும் மார்க்கஞ்செய்து வைக்கிறேன்.

(சீன் முடிவு) [செல்கின்றனர்.]

## சீன்—11.

இடம்—தர்பார்.

**நடிகர்:—அழகேசன், மந்திரிகள், காவலன், நட்டுவன், லலிதாங்கி, குறத்தி.**

நட்டு. வ-ம்:—நமஸ்காரம்; மகாராஜாவைக் காணவேண்டும்.

காவ. வ-ம்:—தாங்கள் யார்?

நட்டு. வ-ம்:—நட்டுவனார்,

காவ. வ-ம்:—விளங்கவில்லை நட்டுவனாரா நட்டுவக்காலியா?

நட்டு. வ-ம்:—என்னையா ஏளனம் செய்கின்றீர் ஸ்திரீகளை நடனஞ் செய்விப்பவன்.

காவ. வ-ம்:—ஆனாலிங்கெதற்காக வந்தீர்.

நட்டு. வ-ம்:—நமது குழந்தையொன்று பாதநடனத் தேர்ச்சி பெற்றிருக்கிறது சமஸ்தானத்தில் அதை ஆட்டிவைத்து பரிசுபெற்றுப்போக வந்தேன்.

காவ. வ-ம்:—குழந்தை என்றால் அது ஆணா அல்லது பெண்ணா?

நட்டு. வ-ம்:—பெண் குழந்தைதான்;

காவ. வ-ம்:—வந்தவழியைப் பார்த்தேகும் மகாராஜாவுக்கு பெண் வாடையே கூடாது.

நட்டுவன். வ-ம்:—சிறுபிராயம் மகாராஜா அக்குழந்தையைப் பார்ப்பதில் தவறொன்று மில்லை. தயவுசெய்ய வேண்டும். வருவதில் பாதி தமக்குத் தருவது நிச்சயம்.

காவலன். வ-ம்:—இங்குதானிரும். சென்று விசாரித்து வருகிறேன். (அரசனிடம்) பிரபு பாத நடனத்தில் தேர்ச்சி பெற்ற ஓர் கன்னிகையை நட்டுவன் அழைத்து வந்திருக்கின்றான். சமுகம் அந்த நடனத்தைக்கண்டு பரிசளிக்க வேண்டுமாம்.

அழ. வ-ம்:—கன்னிகை இங்கு நடனம் செய்வதைக் காணப் பிரிய மில்லை.

மங். வ-ம்:—மகராஜ்! அப்படி தெரிவிக்கக் கூடாது. ஆண் பெண் யாராயிருக்கினும் ராஜாங்கத்தை நாடி வருபவரை ஆதரித்து அவர்களின் தொழில் முறையைக்கண்டு மகிழ்ந்து பரிசளிப் தனுப்புவதே சிலாக்யம் வந்தவர்களை வந்தவழி பார்த்தேகச் சொல்லுவது ராஜதருமமல்ல.

அழ. வ-ம்:—ஆனல் வரும்படி உத்திரவு கொடு.

காவ. வ-ம்:—ஐயா நட்டுவனுரே தாராளமாக உட்செல்லலாம்.

[நட்டுவனும் லலிதாங்கியும் அழகேசன்முன் வந்து நகஸ்கரித்து]

நட். வ-ம்:—குட்டி பார்க்கவேண்டும். உன் கைவரிசையை யின்று. உம் ஆகட்டும்.

லலி. வ-ம்:—மாமா எல்லாம் தங்கள் ஆசிர்வாதம்தான்.

## லலிதாங்கி பாட்டு

### (நம்மகராதே என்ற மெட்டு)

பல்லவி

மோகனமாரா மோகமுமீறுதே
தேகவஜீகரா தேகமும் சோறுதே (மோ)

அநுபல்லவி கண்ணிகள்

பஞ்சணைநாடியே பனிமலர்சூடியே
கொஞ்சிநாம் கூடியே கூடரீயன் மோடியே (மோ)

சுந்திரரூபனே சொகுசுள்ளமாரனே
தந்திரவீரனே சரசகெம்பீரனே (மோ)

[நடனம் செய்ய அழகேசன் தர்பாரை விட்டிறங்கி லலிதாங்கியைச் சுற்றிவரல். மனோதர்மமாக செய்குறிகள் இந்த சீனில் தேவை.]

லலி. வ-ம்:—மாமா போகலாம் வாருங்கள்;

## அழகேசன் விருத்தம்

பூலோகரம்பை புவிமாதர் போற்றும் பொன்னரம்பை
மேலோகரம்பை இவள் காலழகுக்கு மெய்சலிப்பாள்
காலோடணைத்து ஒருதரங் காமன் கலவிசெய்தால்
சாலோக சாமீபசாரூப சாயுச்யஞ் சார்ந்திடுமே.

## அழகேசன் பாட்டு

(இந்தியர் நேசுவுவேலை என்ற மெட்டு)

மாதர்சுகந் தெரியாமல் இந்த
மர்மத்தை யறியாமல்
காதலதைக் கருதாமல் சும்மா
கழித்தேனேவீண்காலம் நானே (மாத)

பேரின்பமேபெரு மோசம் இந்த
பெண்ணிவள்சுக நேசம்
பாரதனில் கயிலாசம் இன்று
பார்த்தேனேவீணுக நானே (மாத)

வ-ம்:—உலகத்திலே பேரின்பமே சிறந்ததென்று தேகத்தில் சாம்பலைப்பூசிய பயித்தியக்காரர்களின் வாய்பேச்சைநம்பி வாழ்நாள் கழித்ததின் பலனை யின்றேகண்டேன். அப்பப்பா சொல்லவும் வேண்டுமா? இல்லறத்தின் இன்பத்தை.

காவ. வ-ம்:—ஜேய்சங்கர் மஹாதேவ்!

அழ. வ-ம்:—அடே! என்னடா மகாதேவன் எங்கே இருக்கின்றார் தெரியுமா? இதோ இந்த மகாரசி இடம்தான் வாசம் செய்கின்றார்.

காவ. வ-ம்:—ஆமாம்; மகாராஜா தாங்கள் இத்தனை நாளாக சங்கரனைத்தியானித்து வந்ததின்பலனாக இன்று சுவாமி பிராப்தமாகி விட்டார் கண்டு சேவித்துக்கொள்ளுங்கள்.

அழ. வ-ம்:—மாமா! இங்கு வாரும் இந்தப் பெண்ணமுதத்தைக் கொடுக்கவேண்டும்.

காவ. வ-ம்:—அமுதத்தைக் கொடுமையா அரசர் புசித்துப் பார்க்கட்டும்.

மாமா. வ-ம்:—தாங்கள் சொல்வது ஒன்றும் விளங்கவில்லை.

லலி. வ-ம்:—மாமா வாரும் போவோம்;

அழ. வ-ம்:—இக்கன்னிகையை விவாகம் செய்து கொடுத்துவிடும்.

காவ. வ-ம்:—ஜேசங்கர்.

அழ. வ-ம்:—அடே! இன்னொருமுறை என் காதில் அந்த வார்த்தையைப் போட்டால் தண்டிப்பேன். ஜாக்கிரதை; மாமா! என்ன தெரிவிக்கின்றீர்.

மாமா. வ-ம்:—அது விஷயம் அவளைக் கேட்கவேண்டும்,

அழ. வ-ம்:—எப்படியாவது சரிப்படுத்தும்; உமக்கென்ன வேண்டு மானாலும் தருகிறேன்.

[நட்டுவனும், லலிதாங்கியும் ஓர் புறமாக ரகசியம் பேசிக்கொண்டு]

மாமா. வ-ம்:—அந்தப் பெண் கரத்தில் தமது பெயரையும், தம் கரத் தில் அந்தப் பெண் பெயரையும் எழுதி பச்சை குத்தவேண்டு மாம்; அப்படி செய்தால் விவாகம் செய்துகொள்வதாகத் தெரி விக்கின்றாள்.

அழ. வ-ம்:—தடையில்லை; முன்பு விவாகமாலை சூட்டுவோம்.

[லலிதாங்கியும், அழகேசனும் மாலை மாற்றி ஓராசனத் தமர்கின்றனர்]

அழ. வ-ம்:—அடே காவலா! நமது அரண்மனைக் குறத்தியை அழைத் துக்கொண்டு வா.

காவ. வ-ம்:—இதோ; வந்துவிட்டேன்.

[குறத்தி பிராப்தம்]

## குறத்தி பாட்டு

சுந்தரமாய் சுகிர்தகுறவஞ்சிவந்தாள் (சுந்)

கந்தகளபம்பூசி கன்னியர்தம்மையேசி
தந்திரமாகப்பேசி தளுக்காய்கைகளைவீசி (சுந்)

தண்டைசதங்கைபூட்டி சரிகைசேலையைக்காட்டி
கொண்டைகுலுங்கஆட்டி குறிப்பாய்பாரதங்கூட்டி (சு)

வ-ம்:—அம்மே பச்சை குத்தலையோ அம்பே! பச்சை குத்தலையோ! கூடைமுறங் கட்டலையோ அம்மே! கூடைமுறங் கட்டலையோ! கிரைமணி வாங்கலையோ அம்மே! கிரைமணி வாங்கலையோ!

## குறத்தி பாட்டு

பச்சைகுத்தலையோ அம்மாயி
பாச்சிவாங்கலையோ அம்மாயி
கக்சைகட்டலையோ அம்மாயி
கயறுவாங்கலையோ அம்மாயி
கூடைமுடையலையோ அம்மாயி
குருவிவாங்கலையோ அம்மாயி
காடைவாங்கலையோ அம்மாயி
கஞ்சிவார்க்கலையோ அம்மாயி

வ-ம்:—அம்மா! வக்காமணி; கொக்குமணி; நரிப்பல்லு பாலமணி; நீல மணி; எல்லாமிருக்கு அம்மே! வாங்கிப்பாருங்க.

சேவ. வ-ம்:—ஆத்தாடி! உன்னை மகாராஜா வரச்சொன்னரு.

குற. வ-ம்:—எண்டாய்யே! என்னை ஏதுக்கு ராசா வரச்சொன்னரு.

சே. வ-ம்:—மகாராணியாருக்கு பச்சைகுத்தணுமாம்; யே ஆத்தா! நீ என்னென்ன பச்சைகுத்துவ.

குற. வ-ம்:—ஐயே! பாம்பு பச்சை; தேளு பச்சை; மீனு பச்சை; மினுக்கு பச்சை; பானை பச்சை; ஆனை பச்சை; பூனை பச்சை; நீயும் பச்சை; நானும் பச்சை; எல்லா பச்சையுங் குத்துவேன்.

சேவ. வ-ம்:—மகா கெட்டிக்காரிதான்; மகாராஜா வரச்சொன்னரு போ.

[குறத்தி அழகேசனிடம் வந்து]

குற. வ-ம்:—கும்பிட்றேண்டா ஐயே! கும்பிட்றேண்டி அம்மே!

அழ. வ-ம்:—நல்லது; இப்படிவா.

[குறத்தி அமர்கின்ருள்; அழகேசன் லலிதாங்கியின் கரத்தில் தன் பெயரை எழுதுகின்ருன்; குறத்தி பச்சை குத்துகின்ருள்]

## குறத்தி பாட்டு

நான்சொல்ற பாட்டைக்கேளு
ஓ அம்மே ஓ ஆயி இள
நங்கைவருந்திடாதே ஓ அம்மே (நான்)

சீராமர் பெண்டாட்டியாம்
ஓ அம்மே ஓ ஆயி அந்த
சீதாதேவி யம்மனும் ஓ அம்மே (நான்)

பத்துதலை யரக்கன்
ஓ அம்மே ஓ ஆயி அந்த
பத்தினியை சிறைஎடுத்தான் ஓ அம்மே (நான்)

[லலிதாங்கி அழகேசன் கரத்தில் தன் பெயரை எழுத குறத்தி குத்தி முடிக்கின்ருள்]

அழ. வ-ம்:—சேவகா! இவளுக்கு வேண்டிய திரவியங் கொடுக்கும் படி நமது கஜாணுதிகாரியிடம் சொல்லி யனுப்பு.

[சேவகன் குறத்தியை உள்ளேவிட்டு வருகின் ருன். லலிதாங்கி மறைவி லிருக்கின்ருள்]

அழ. வ-ம்:—அடே! இதென்ன என் கரத்தில் எழுதியிருக்கும் எழுத் துக்களை கவனித்துப் பார்.

சேவ. வ-ம்:—பிரபு! ல லி தா ங் கி லலிதாங்கியென் றெழுதி யிருக் கின்றது.

அழ. வ-ம்:—ஆம்; லலிதாங்கி என்று முன்ெனாரு பெண் நமக்குக் கடிதமனுப்பி நேரிலிங்கு வந்து வாதிட்டு நம்மால் கானகத்தில் விடப்பட்டா ளல்லவா அவள் தானே.

சேவ. வ-ம்:—என்னமோ மகாராஜா! எனக்கு சந்தேகமா யிருக்கின் றது வரவழைத்துக் கேட்டுப் பார்க்கிறதுதானே.

[லலிதாங்கி வெளிவர அழகேசன் உற்றுப் பார்த்து நிற்கின்ருன்]

லலி. வ-ம்:—பிராணநாதா எதற்காக மயங்கி நிற்க வேண்டும்.

அழ. வ-ம்:—ஒன்றுமில்லை. முன் எப்போதாவது இங்கு வந்த துண்டா.

லலி. வ-ம்:—வந்திருக்கின்றேன். நீரென்னைக் காட்டில் விடும்படி கட்டளையிட்டீரே. மறந்துவிட்டீரா நாதா என்னைப் பாரும் உமது எண்ணம் பலித்ததா. மோசம் போனீரா.

அழ. வ-ம்:—காதலி உன் எண்ணமே யீடேறிற்று. நிற்க என்னை விட்டுப் பிரிந்தபின் நடந்த விஷய மென்ன.

### லலிதாங்கி நொண்டிச்சிந்து

ஆசைக்கிசைந்த துரையே இந்த
ஆரணங்கென் சேதிதனைக் கூறிடக்கேளும்
தேசமெல்லாம் புகழும் சித்ர
க்ஷேத்திரபுரத்தரசை யாண்டிடுமன்நாள்
மாமணமாலைமுடிக்கத் தகுந்த
மன்னவனைக் கோரிமனம் வருந்திநிற்க

பூமனுன் பெயருரைத்து தாதி
போய்வருவேன் தூதெனவே ஓலைஎழுதி
விடுத்தேன் உமதிடத்தில் அந்த
விபரமதை யறிந்து அபலைதனை
அடித்துத் துரத்தி விட்டீர் நானும்
ஆகட்டுமென்றிங்குவர விலங்கிட்டுக்
கானகந் தன்னில் விடவும் அங்கே
கண்டபெரும்பூதமொன்று என்னைமருவ
ஆனவா திடும்போது வந்த
அரசனிடத்தணுகி உருமாறி
திருடர்கள் தயவாலே காளி
தேவதைபோல் மாவனத்திலேநடித்து
வரும்வழி தனிலிருந்த காங்கேய
மாமுனியின் ஆசிரமந்தனில் சிலநாள்
தங்கி நடனங் கற்று இந்த
தர்பாரிலாடியுமை வதுவைசெய்தேன்
சங்கதியா மிதுவே சென்னை
சங்கரலிங்கற்கினிய சரசிஎந்தன் (ஆசை)

அழ. வ-ம்:—உன்னுடன் வந்தவர் காங்கேய முனிவரா.

லலி. வ-ம்:—ஆம்.

[நட்டுவன் வேடத்துட னிருந்த முனிவர் வெளிவர]

அழ. வ-ம்:—சுவாமி! நமஸ்காரம். அடியேன் குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்.

காங். வ-ம்:—இராஜன் உனது பூர்வீக வினைப்பயன் சிலகாலம் இல்லறத்தி லீடுபட்டிருக்க வேண்டும். ஆதலின், அந்த ரகசியத்தை ஞானசக்தியால் தெரிந்த நான் இம்மங்கைக்கு பரதநடனம் பயில்வித்து இங்கு நடிக்கச்செய் துன்னை மயக்கிவிட்டேன். இனி இருவரும் இரதி மதனென இல்லற நடத்திப் புத்திரப் பேற்றை யடைந்து இறுதியில் எம்பெருமான் கிருபைக்குப் பாத்திர ராவீராக.

அழ. வ-ம்:—திருவாக்கிற்குச் சித்தமா யிருக்கிறேன்.

நாத. வ-ம்:—நல்லது! நான் சென்று வருகிறேன்.

(எல்லோரும் பாடுதல்)

ஆனந்தச் சோபனமே தானன்புக்கே மனமே
ஆலிங்கனஸ்தாபனமே மேலுங்கண்டோ முனமே

ஆரம்பம் பாரெங்கும் ஆணும்பெண்ணுந்தான்
சேரும்பண்பே கொண்டுந் தோணுங் கண்ணுந்தான்

அதிமதுரிதரகசிய முண்டாருக்குத்தான்
பொதுவிதி யிதுமதி பேசும்பேருக்குத்தான்

ஆமுத்தி நூலுக்கிதே செப்புமே
மாமுத்து சாமிக்குளே ஒப்புமே (ஆ)

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றுப்பெற்றது.

---

## கவனிப்பு:

இந்நூலில் அச்சியற்றிய அவசர நிமித்தம் சொற்குற்றம் பொருட்குற்றம் எழுத்துப் பிழைகள் பலவிருக்கினும் முக்கியமான ஓர் குறைவை விவரமாக இங்கெழுதி யிருப்பதை ஆமோதித்து நம் நாடகாபிமானிகள் பலரும் அதன்படி இக்கதையைத் திருத்தமாக வாசித்துக்கொள்ளக் கோருகிறேன். அதாவது:—

இந்நூல் 30-வது பக்கம் 13-வது வரியில் சீன் 6. என்பதற்குப் பதிலாக சீன் 7. என்னும் நெம்பர் அச்சிட்டிருப்பதை நீக்கி வரிசைக் கிரமமாக 6-7-8-9-என்று திருத்தஞ் செய்துகொள்ளக் கோருகிறோம்.

திருமகள் விலாசம் பிரஸ், சென்னை:—1932.

ஸ்ரீமத்

# கந்தபுராண வசனம்

[இதேமாதிரி பெரிய எழுத்தில் அச்சிட்டு 40-அழகிய லெத்தகிராப் கலர் படங்கள் கூடியது. திக்குகடிதத்தி லச்சிட்டது: 1050-பக்கங்கள் கொண்டது: உயர்ந்த காலிகோ பைண்டு செய்தது: விலை ரூபா 5.

ஷை உயர்ந்த கிளேஸ் கடிதம் 2-வால்யம் விலை ரூபா 9.]

முருகப்பெருமான் திருவவதாரத்தைப்பற்றி உரைக்கும் நூல்கள் யாவற்றிலும் சிறந்தது கந்தபுராணமே ஆகும்.

கந்தபுராணம் செய்யுள் வடிவத்திலே இருத்தலின் அதனை பயிலுவோர் இலக்கண இலக்கிய பயிற்சி உடையவராக இருந்தால் அன்றி அது மிக்க பயன் விளைக்கமாட்டாதாகும்.

அருமை வாய்ந்த கந்தபுராத்தினை முன்னரே பலர் வொருவாறு வசனரூபமாக்கி அச்சிட்டிருப்பதில் செய்யுட் காவியத்திற்கும் இதற்கும் அநேக யிடங்களில் கதையும் கருத்தும் மாறுபட்டிருப்பதுமல்லாமல் கற்று வல்லோர்க்கும் கற்றுவல்லோரல்லார்க்கும் வெறுப்பினை யுண்டாக்கத்தக்கனவாகிய நடைகளோடு சொன்னயங்களும் பொருணயங்களும் சிறிதும் பொருத்தமின்றி பல வழுஉக்களுடன் அச்சிடப்பட்டிருந்தமையால் அக்குறையை நீக்குவான் வேண்டியாம் தக்க வித்வான்களின் உதவியைக்கொண்டு முறைப்படுத்தபடுவனவும், திருத்தப்படுவனவும், சேர்க்கப்படுவனவும் இவற்றை முறையே சேர்த்தும் முறைப்படுத்தியும் வெள்ளறிவினருக்கும் எளிதில் விளங்குமாறு பெரிய எழுத்தில் திருத்தமாகவும், புராணத்திலடங்கிய படங்களில் நிகழும் விஷயங்களுக்கு பொருத்தமாகவும் நேரிற் கண்டாற்போல விளங்கத்தக்க 40-திருவுருவப் படங்களுடன் அமைத்து சேர்த்தும் அச்சிட்டுள்ளோம். இதனைப் படிப்போர் மன முருகி அன்புவயப்பட்டு முருக தாசர்களாக விளங்குவார்கள் என்பது திண்ணம்.

எல்லா புஸ்தகங்கள் அடங்கிய கிரய ஜாபிதா தேவையுள்ளவர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் இனமாக அனுப்பப்படும்.

**B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,**

நெ. 41, வெங்கடருமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.

ஸ்ரீமத்

# மகாபாரத வசனம்

[☞ இதேமாதிரி பெரிய எழுத்தில் படங்களுடன் அச்சிடப்பட்டு 2000-பக்கங் கொண்டது: திக்குகடிதம் 4-வால்யம் காலிகோ பைண்டு: விலை ரூபா 8—0—0.]

இதிகாசங்களி லொன்றாகியும், தர்மார்த்த காமமோக்ஷங்களை யளிக்கவல்ல ஐந்தாம் வேதமென ஸ்ரீ வியாசமுனிவரால் வகுக்கப்பட்ட ஸ்ரீமகா பாரதத்தை ஸ்ரீமகா கணபதி தமது கோடொன்றை எழுத்தாணியாகவும், மகா மேருவை ஏடாகவும் கொண்டு எழுதி முடித்தார் என்பது வரலாறு. இவ்வரிய நூலை நிலைபெற்ற சைவ, வைணவ, ஸ்மார்த்த, மாத்வ சமயிகளுக்கும் உபயோகமாகும்படி ஆதிபர்வம், சபாபர்வம், ஆரண்யபர்வம், விராடபர்வம், உத்தியோக பர்வம், வீஷ்மபர்வம், துரோணபர்வம், கர்னபர்வம், சல்லியபர்வம், சவுத்திகபர்வம், ஸ்ரீ பர்வம், சாந்திபர்வம், அநுசானிகபர்வம், அஸ்வமேதபர்வம், ஆசிரமவாசபர்வம், முசலபர்வம், மஹாப்பிரஸ்தானிகபர்வம், சொர்க்காரோகண பர்வம், என்னும் 18-பர்வங்களையும் பாரதப் பிரசங்கியாகிய, த. சண்முகக் கவிராயரால் திராவிட வசன ரூபமாக எழுதப்பட்டதை சுத்தப்பிரதியாக பெரிய எழுத்தில் படங்களுடன் அச்சிடப்பட் டிருக்கின்றது.

# ஸ்ரீ மஹா பக்தவிஜயம்

[☞ இதேமாதிரி பெரிய எழுத்தில் 700-பக்கம் கொண்டது: பண்டரிநாதன் படத்துடன் அச்சிட்டு காலிகோபைண்டு செய்தது: விலை ரூபா 1—8—0

இப் பூவுலகின்கண் ஜனித்த ஆன்மகோடிகள் உஜ்ஜீவிக்கும் பொருட்டுத் திருவவதாரஞ்செய்து பகவத்பக்தி இத்தகைய சிறப்பினை யுடையதென்று யாவருக்கும் தெரியக்காட்டி முத்திப்பேற்றினைப் பெற்ற ஜெயதேவர், கபீர்தாசர், நாமதேவர், துளசிதாசர், ஞானதேவர், குசேலதாசர் முதலானவர்களின் சரித்திரங்களை ஆங்காங்குச் சமயோசித சுருதிப் பிரமாணங்களுடன் இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூலை வாசிப்போர் மனமுருகி பகவானிடத்தில் அன்புவயப்பட்டு பேரின்பமுத்தி யடைவார்களென்பது திண்ணம்.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 41, வெங்கடறாமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.

அனுபவ

# ஹஸ்தரேகை சாஸ்திரம்

(சக்திதாஸன் எழுதியது)

[நூற்றுக்கணக்கான படங்களுடன் கூடியது: விலை ரூபா 2.]

விளக்கமான அநேக படங்கள் அடங்கிய இச் செந்தமிழ் வசன நூலறிவினால் ஆயுள், விவாக லாபம், குணம், பக்தி, அதிர்ஷ்டம், சந்தானம், அறிவு, சிற்றின்பம், வியாஜ்ஜியம், சக்தி, ஐசுவரியம், கண்டம், ஜயம், வியாதி, அபாயம், வஞ்சகம், பேரின்பம், காரிய சித்தி, சௌக்கியம், தயை, அஜீரணம், இல்லற சுகம், மரணம் முதலிய விஷயங்களைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். அன்றியும், இது விதியின் பலனையும், வாழ்க்கையின் இரகசியங்களையும், இன்னம் அநேக மர்மங்களையும் வெளிப்படுத்துகிற திறவுகோலாக இருக்கிறது.



முக்கால வரலாறுகளையும் அறிய இவ்வனுபவ நூல் துணையாகும். உங்கள் கையிலுள்ள ரேகைப் பலன்களைச் சுலபமாய் நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

---

| | | | |
|---|---|---|---|
| கிராமபோன் கீதாமிர்த களஞ்சியம் 8-பாகம் கட்டடம் | 0 | 6 | 0 |
| ஷை 4-பாகம் ஷை | 0 | 4 | 0 |
| ஷை தனித் தனி பாகம் 1-க்கு | 0 | 1 | 0 |
| புதிய கொலம்பியா ரிகார்டு பாடல்கள் 16-பாகங்களடங்கியது 4-ஆப்டோன் படங்களுடன் கூடியது | 0 | 8 | 0 |
| ஷை 8-பாகம் கட்டடம் | 0 | 4 | 0 |
| ஷை தனித் தனி பாகம் 1-க்கு | 0 | 1 | 0 |
| மதுரை: N. S. ஷண்முகம் பாடிய பபூன் பாடல்கள் 4-பாகம் கட்டடம் | 0 | 4 | 0 |
| ஷை தனித் தனி பாகம் 1-க்கு | 0 | 1 | 0 |

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 41, வெங்கடராமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.

# நம்மிடம் கிடைக்கக் கூடிய

## புஸ்தகங்கள்.

வடுவூர். கே. துரைசாமி ஐயங்காரவர்கள் பி. ஏ.,யால்
எழுதப்பட்டவை.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பரசாமியார் | | | |
| | 1-வது பாகம் | 1 | 8 |
| | 2-வது பாகம் | 1 | 8 |
| மாயாவினோதப்பரதேசி அல்லது திகம்பரசாமியார் | | | |
| | 3-வது பாகம் | 2 | 8 |
| | 4-வது பாகம் | 2 | 8 |
| பூர்ணசந்திரோதயம் | 1-வது பாகம் | 1 | 12 |
| | 2-வது பாகம் | 1 | 12 |
| | 3-வது பாகம் | 2 | 0 |
| | 4-வது பாகம் | 2 | 0 |
| மதனகல்யாணி | 1-வது பாகம் | 1 | 8 |
| | 2-வது பாகம் | 1 | 8 |
| | 3-வது பாகம் | 1 | 8 |
| சௌந்தர கோகிலம் | 1-வது பாகம் | 1 | 8 |
| | 2-வது பாகம் | 2 | 4 |
| | 3-வது பாகம் | 2 | 4 |
| திகம்பரசாமியார் பாவிய லீலை | | | |
| | 1-வது பாகம் | 2 | 8 |
| | 2-வது பாகம் | 2 | 8 |
| மேனகா | 1-வது பாகம் | 1 | 8 |
| | 2-வது பாகம் | 1 | 8 |
| பாலாமணி | | 2 | 8 |
| வஸந்தமல்லிகா | | 1 | 8 |
| வித்தியாசாகரம் | | 1 | 4 |
| திலோத்தமா | | 0 | 12 |
| திவான் லொடபட சிங் பகதூர் | | 0 | 12 |
| மாணிக்க வாசகர் | | 0 | 8 |

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 41, வெங்கடாசலமய்யர் தெரு,
மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.

சங்கீத சாஹித்திய ... ண்ணச் சரபம்

S. S சங்கரலிங்க... ிராய ரியற்றிய

புதிய டிராமா சரித்திரங்கள்:

| | | | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| கோவலன் சரித்திரம் | [நாடக ரஞ்சிதம் | மலர் | 1] | 0 | 6 | 0 |
| நல்லதங்காள் சரித்திரம் | ,, | ,, | 2 | 0 | 6 | 0 |
| லலிதாங்கி சரித்திரம் | ,, | ,, | 3 | 0 | 6 | 0 |
| ஸ்ரீ பாமா விஜயம் | ,, | ,, | 4 | 0 | 6 | 0 |
| பாதுகா பட்டாபிஷேகம் | ,, | ,, | 5 | 0 | 6 | 0 |
| ஸ்ரீ ராமதாஸ் சரித்திரம் | ,, | ,, | 6 | 0 | 6 | 0 |
| தூக்கு தூக்கி சரித்திரம் | ,, | ,, | 7 | 0 | 6 | 0 |
| ...த்தியவான்-சாவித்திரி | ,, | ,, | 8 | 0 | 6 | 0 |
| நந்தனர் சரித்திரம் | ,, | ,, | 9 | 0 | 6 | 0 |
| ஷை 9-சரித்திரங்கள் ஒரே கட்டடம் காலிகோ பைண்டு செய்தது "நவ நாடகரஞ்சிதம்" | | | | 3 | 0 | 0 |

மதுரை

K. குற்றாலப்பிள்ளை அவர்களியற்றிய

டிராமா சரித்திரங்கள்:

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஞானசௌந்தரி ... ... ... | 0 | 4 | 0 |
| கோவலன் ... ... ... | 0 | 4 | 0 |
| அரிச்சந்திரா ... ... ... | 0 | 4 | 0 |
| வள்ளிதிருமணம் ... ... ... | 0 | 4 | 0 |
| அல்லி-அர்ஜுனு ... ... ... | 0 | 4 | 0 |
| பவளக்கொடி ... ... ... | 0 | 4 | 0 |
| சாரங்கதரா ... ... ... | 0 | 4 | 0 |
| சகுந்தலா ... ... ... | 0 | 4 | 0 |
| காலவரிஷி ... ... ... | 0 | 4 | 0 |
| ஷை 9-சரித்திரங்கள் ஒரே கட்டடம் காலிகோ பைண்டு செய்தது "நவ நாடக மஞ்சரி" | 2 | 4 | 0 |

ஏகை

சிவஷண்முகப்பிள்ளை அவர்களியற்றிய

டிராமா சரித்திரங்கள்:

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| சம்பூர்ண இராமாயணம் 12-பாகங்களடங்கியது | 2 | 0 | 0 |
| லவகுச ... ... ... ... | 0 | 4 | 0 |

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 41, வெங்கடருமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.